திராவிடநாடு

19—4—59 | வார வெளியீடு | விலை 16 காசு

திருவிடப் பொன்னாடே!

(நாஞ்சில் ஆ. ஆரிது)

மலைகளிலே மணிவிளையுந் திருவிடப்பொன்னாடே—நல்
மயில்களுறை வனம்பெருகும் திருவிடப்பொன்னாடே
அலைகடலில் முத்திருத்தித் திருவிடப்பொன்னாடே—இவ்
வவனியெலாம் புகழ்வளர்த்தாய் திருவிடப்பொன்னாடே
கலைகளிலே தலைசிறந்தாய் திருவிடப்பொன்னாடே—நீ
கருதுமுயர் நிலைபெற்றாய் திருவிடப்பொன்னாடே
குலைக்கனியின் முதுநறவாய்த் திருவிடப்பொன்னாடே—யாம்
குலவுதமிழ் மொழிபிழிந்தாய் திருவிடப்பொன்னாடே!

உள்ளுலவும் எழிலுருவாய்த் திருவிடப்பொன்னாடே—நீ
ஒளிர்நான்கு மொழிபெற்றாய் திருவிடப்பொன்னாடே
கள்ளுதமிழ் மொழிவளர்க்க திருவிடப்பொன்னாடே—பல்
கறையறுநற் கவியீந்தாய் திருவிடப்பொன்னாடே
துள்ளுகின்ற மான்செயலில், திருவிடப்பொன்னாடே—தேன்
துய்த்தறியும் அளிசெயலில், திருவிடப்பொன்னாடே
கொள்ளுகின்ற இன்பமதில் திருவிடப்பொன்னாடே—பண்
கொஞ்சுதமிழ் மொழிகண்டார் திருவிடப்பொன்னாடே!

அன்னவர்கள் வழிவந்தோர் திருவிடப்பொன்னாடே—ஏன்
அன்னவராய் வாழவிலை? திருவிடப்பொன்னாடே
முன்னவர்கள் புகழறிந்தும் திருவிடப்பொன்னாடே—ஏன்
மொழிமறந்தார்? அகமிழந்தார்? திருவிடப்பொன்னாடே
என்னவர்கள் முழுமூச்சே! திருவிடப்பொன்னாடே—நீ
இன்றுவலை பட்டதுமேன்? திருவிடப்பொன்னாடே
தென்னவர்கள் உடலுயிரே! திருவிடப்பொன்னாடே—ஏன்
திருவிடமாய் இன்றிலைநீ? திருவிடப்பொன்னாடே!!

பணம்
பாழாகும் விதம் பாரீர்!

ச. கனகராசன்

"நிர்வாகச் செலவில் பணம் வீண் விரயமில்லாமல் இருந்தால் ஆண்டுக்கு ரூ. 50 கோடி மிச்சப்படுத்தலாம். மக்கள்மீது சுமத்தப்பட்ட வரிச்சுமையைச் சிறிதளவு குறைக்கலாம்"—என்று அனைத்திந்திய அரசின் நிர்வாகத் திறனை ஆராய்ந்து நற்சான்று பகன்றுள்ளார், பெரோஸ் காந்தி.

காங்கிரஸ் துரைத்தனத்தின் நிர்வாகச் சீர்கேட்டைப் பற்றிக் காங்கிரஸைச் சார்ந்த எம். பி. யாகிய பெரோஸ்காந்தியே குற்றஞ் சாட்டியிருக்கிறார். மாமனாரின் ஆட்சிபற்றி மருமகனாரே குற்றஞ் சாட்டியிருக்கிறார். எங்கே இந்தக் குற்றத்தைச் சாட்டியிருக்கிறார் என்றால் காங்கிரஸ் கட்சியின் எம். பி.க்களின் கூட்டத்தில்.

ஆளும் காங்கிரஸார் ஆட்சிக்கு வந்து ஆண்டுகள் பதினொன்று ஆகிவிட்டன. பதினொரு ஆண்டுகள் தொடர்ந்து கோலோச்சும் வாய்ப்பைப் பெற்றிருந்தும், நிர்வாகத் திறனும் போதிய பயிற்சியும் பெற்றதாகத் தெரியவில்லை. சுதந்திரம் கிடைத்தால், நாட்டில் பாலாறும் தேனாறும் பாய்ந்தோடும் என்று வாய்ப்பறை கொட்டியவர்கள் ஆட்சியில் வறுமையும் வாட்டமும் அதிகரித்திருக்கின்றது. அன்றாடங்காய்ச்சிகளும் ஆலாய்ப் பறக்கின்றனர். இவர்களது ஆட்சியில் தென்றல் வீசவில்லை. மாறாக, புயல்தான் வீசியிருக்கிறது. பன்னீரைத் தெளிக்கவில்லை. மாறாக, கண்ணீரைத் தருகிறது.

பஞ்சத்திலும் பட்டினியிலும் அடிபட்டு வறுமையோடும் வாட்டத்தோடும் இருப்பவர்களிடம் அவர்கள் சிந்தும் வியர்வையை—குருதியை—'வரி' என்று போட்டுக் கோடிக்கணக்கில் வசூலித்துத் 'திட்டங்கள்' என்று சொல்லிக் கொண்டு பணத்தைப் பாழாக்குகிறார்களேயொழிய, எந்தத் திட்டத்திலும் வரிப்பணம் பாழாகாமல் — வீணாகாமல் செலவு செய்ததாகத் தெரியவில்லை.

டெல்லிப் பெரியவர்களால் ஏழைகளின் வரிப்பணம் எவ்வாறு வீணாகிறது என்பதை விளக்க ஒரு சில எடுத்துக்காட்டுகளே போதும்!

ஊழல்களுக்கும், ஊதாரிச் செலவுகளுக்கும் பெயர்போன பாதுகாப்பு இலாகா, சில ஆண்டுகளுக்கு முன் ரூ. 19-இலட்சம் கொடுத்து ஒரு இலட்சம் 'ரவுண்டு' வெடிகுண்டுகள் வாங்கிற்று; ஆனால், அவை பழுதுடையன என்பதால், அவற்றை எவ்வகையிலும் உபயோகிக்க முடியவில்லையாம். இதனால் ரூ 19-இலட்சம் நஷ்டம் ஏற்பட்டதாம்!

ஆகாய விமானங்களுக்கான சில எஞ்சின்களை, அவற்றிற்குக் காலதாமதமாக 'ஆர்டர்' கொடுத்ததால் 12,500-பவுனுக்குப் பதிலாக 13975-பவுன்வீதம் கொடுத்து வாங்கியதால் எஞ்சின் ஒன்றுக்கு 1275-பவுன்; அதாவது ரூ. 16,893·75-வரை நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதாம்!

தபால் தந்தி இலாகாவில், சாமான் சேமிப்புக் கிடங்கிலிருந்து பொருள் (பெரும்பாலும் செப்புக் கம்பிகளே) காணாமற் போனதால் ரூ. 14 28,092-வரை நஷ்டமாம்!

'தொழில் நிதி உதவி நிறுவனம்' என்ற நிறுவனத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்காக மனையொன்று வாங்கித் திரும்ப விற்றதில் ரூ. 1,98,466-வரை நஷ்டம் ஏற்பட்டதாம்!

இராணுவத் தளவாடத் தொழிற் சாலையில் ஏற்பட்டுள்ள நஷ்டங்களில் ஒரு கணக்கில் காட்டப்பட்டுள்ள ரூ. 80-இலட்சம் பெறுமான நஷ்டத்தை வாராத கணக்கில் எழுதப் போகிறார்களாம். இதுபோன்ற நஷ்டங்கள் சிலவற்றை வாராத கணக்கில் எழுதலாமா என்று யோசித்தும் வருகிறார்களாம்!

டெல்லியின் சிபாரிசின்பேரில் பம்பாய் சர்க்கார், இல்லாத நிறுவனம் ஒன்றிடம் ரூ. 29-இலட்சத்தைக் கொட்டிக் கொடுத்து ஏமாந்துவிட்டதாம்!

மேலே கண்ட ஊழல்களின் பட்டியலைப் பார்த்தவுடன் காங்கிரசின் நிர்வாகத்தைப்போல ஊழல்களும் ஊதாரிச் செலவுகளும் நிறைந்த ஓர் நிர்வாகத்தை யாங்கணும் காண்பது அரிது என்பதை உணரமுடியும்.

'நாம் செலவழிக்கும் பணம்—பாழடிக்கும் பணம் ஏழை எளியவர்களின் வரிப்பணம்' என்று கொஞ்சமும் எண்ணாது பயமின்றிப் பாழடிப்பதைப் பார்த்தால், இது நீதியா? நேர்மையா? இது ஆகுமா? அடுக்குமா? என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

'இதுபோன்ற அனாவசியச் செலவுகள் நிகழாமல் இருந்திருந்தால் ஆண்டுக்கு ரூ 50-கோடி மிச்சப்படுத்தலாம்' என்று பெரோஸ்காந்தியே சொல்லும்போது காங்கிரசின் நிர்வாகத் திறனைப்பற்றி நாம் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

(13-ம் பக்கம் பார்க்க)

வணக்கம் செலுத்துகிறோம்

மலர் 17 | ஆண்டு சந்தா ரூ. 8 | [19-4-59] | தனிப் பிரதி 16-காசு | இதழ் 40

"திராவிட முன்னேற்றக் கழகமா? நாட்டில் அதற்குச் செல்வாக்கேது? அவர்கள் காடியாகக் கத்தினாலும் ஓட்டு நமக்குத்தான். சட்டசபையைப் பாருங்களேன்! அவர்கள் பதினைந்து-நாம் நூற்றைம்பது! அவர்களிடம் திட்டமேது? அதனைச் சாதிக்கும் திறமேது? ஏதோ கூட்டத்தைச் சேர்த்து மேடையதிரப் பேசுவார்கள்—அவ்வளவுதான். மக்களின் ஆதரவு அவர்களுக்குத் துளியும் கிடையாது" என்றெல்லாம் வீரமுழக்கம் எழுப்பிய காங்கிரசுக்காரர்கள்—காமராசரிலிருந்து கடைசி ஆள்வரை, இன்று சுருதிகுறைந்து சோகம் கப்பியிருப்பதைக் காண நமக்கே பரிதாபமாகத்தான் இருக்கிறது. இருந்தும் என்ன செய்வது? காலம் கற்பிக்கும் பாடத்தை நாம் தடுக்கமுடியுமா?

ஒரு காலம் இருந்தது. தி. மு. க. என்றால் ஏதோ பிள்ளைக்கூட்டமென்று நினைத்துக்கொண்டு வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசி, 'எம்மை எவர் அசைக்கமுடியும்' என்று மனப்பால் குடித்த காலம். இப்போது அது மலை ஏறிக்கொண்டிருக்கிறது. மார் தட்டிப் பேசியவர்கள் எல்லாம் மௌனியாகி, மனங் கலங்கி, நிலை தடுமாறி, செய்வதறியாது திகைத்து நிற்கிறார்கள். எழுபதாண்டு ஆலமரத்தை நேற்று முளைத்த காளான் மறைத்துவிட்டதே — மாய்த்துவிட்டதே என்று ஏங்கிக்கிடக்கிறார்கள்.

சென்னை நகரம், இந்தத்தேர்தலில் காங்கிரசுக்கு ஒரு நல்ல பாடத்தைக் கற்பித்துவிட்டது. இனிமேலாவது உங்கள் தலைக்கனத்தைச் சிறிது குறைத்து ஜனநாயகத்துக்கு மதிப்புக் கொடுங்கள் என்று நகரிலுள்ள வாக்காளர் பெருமக்கள் காங்கிரசுக்கு எச்சரிக்கை கலந்த வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எம்மை யார் என்ன செய்துவிட முடியும் என்ற காங்கிரசின் ஆணவப்போக்கினை ஆழக் குழிதோண்டிப் புதைத்துவிட்டனர் சென்னை மக்கள். சென்னைக் கார்ப்பரேஷனுக்கு நாற்பத்தைந்து உறுப்பினர்களை உண்டாக்கித் தருவதன் வாயிலாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் அதன் கொள்கைகளையும் உலகறியச் செய்த சென்னைநகர வாக்காளர் பெருமக்களை வாழ்த்துகிறோம் — பாராட்டுகிறோம் — வணக்கம் செலுத்துகிறோம்.

சென்னை சட்டமன்றத்திலே அவர்கள் பெரும்பான்மையினர் என்றால், சென்னை நகர மன்றத்திலே நாம் பெரும்பான்மையினர்—தேசிய ஏடுகள் குறிப்பிடுவதுபோல் **திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பெரிய கட்சி.** இதனை நமது மதிப்பிற்குரிய காங்கிரஸ் நண்பர்கள் மனதில் இருத்திக்கொள்ளவேண்டும். அதிகாரபலத்தைக் [illegible]யில் வைத்துக்கொண்டு எவ்வளவு ஆட்டம் ஆடினாலும், மக்கள் உள்ளத்திலே ஊறிவரும் உறுதிப்பாட்டினையும் உண்மையையும் ஒன்றும் செய்யமுடியாது என்பதற்குச் சென்னைத் தேர்தல் ஒரு எடுத்துக்காட்டு.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு இதனை ஒரு தூண்டுகோலாக நாம் கொள்ளவேண்டும். சென்னை நகர மக்களின் உறுதியான உளப்பாங்கினை எல்லா இடங்களிலும் உண்டாக்கும் வகையில் நம்முடைய பணி அமையவேண்டும். வெற்றி கண்டு வீராவேசம் கொள்வதும், தோல்வி கண்டு துவண்டுபோவதும் நமக்குப் புறம்பான ஒன்றாகும்.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் இந்தத் தேர்தல் மிகப்பெரிய அளவில் குறிப்பிடத்தக்க மாபெரும் வெற்றியாகும்.

காங்கிரசின் செல்வாக்கையும் அதிகார பலத்தையும் வைத்துப் பார்ப்போமானால், இந்த நகரசபைத் தேர்தல் பொதுவாக எல்லா இடங்களிலும், நம்மை ஏனோதானோ என்றெண்ணி எளனம் புரிந்தவர்கள் எல்லோரும் நம்மைத் திரும்பிப்பார்க்கும் அளவில் நமக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. தமிழ்நாட்டில் நூற்றுக்குமேலான இடங்களைத் திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றி இருக்கிறது. இது நமது எதிர்கால அரசியல் முன்னேற்றத்திற்கு அமைந்த படிக்கட்டாகும். இதனை எந்தக் கட்சியும் மறுக்க முடியாது — மறைக்கமுடியாது. எனவேதான், நம்முடைய எதிர்காலத்தைப்பற்றி நாம் மிகவும் கண்காணிப்போடும் கருத்தோடும் கவனித்துப்பணிபுரிய வேண்டியவர்களாகிறோம் என்பதனை நமது கழக முன்னணி வீரர்களுக்கும் மற்றுமுள்ள எல்லாக் கழகத் தோழர்களுக்கும் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மறந்தும் எதிர்க்கட்சிகளைத் தாக்கும் போக்கு நம்மை அண்டாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

அப்பொழுதுதான் எதிர்கால அரசியல் நாட்டுக்கு நல்ல பயன் அளிப்பதாக அமையும்.

எனவே, சென்னை வெற்றியைக்கண்டு இறுமாந்து கிடந்துவிடாமல், இதுபோன்ற வெற்றி மேலும் பல இடங்களில் இனிமேல் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை உண்டாக்கும் வகையில் நாம் பணிபுரிவோமாக என்று சூளுரை எடுத்துக்கொண்டு, இந்த மகத்தான வெற்றியைத் தேடித்தந்த சென்னை நகர வாக்காளர் பெருமக்களுக்கு மீண்டும் ஒருமுறை எமது வாழ்த்தையும், பாராட்டுதலையும், வணக்கத்தையும் உரித்தாக்குகிறோம்.

திருந்துவார்களா?

பசியுள்ள ஒருவர், தான் நடக்கும் பாதையின் பக்கத்திலே ஒரு புறம் விண்ணை முட்டும் வண்ண மாளிகை. அதிலே கண்ணைப் பறிக்கும் கண்ணாடிச் சன்னல்கள். மற்றோர்பக்கம் மண்குடிசை; அதுவும் குனிந்து நுழைந்து போக வேண்டிய சிறுகுடிசை. இந்தஇரு இடங்களையும் எடைபோட்டார் அந்தப் பசித்தவர். மண்குடிசையிலே என்ன இருக்கப்போகிறது? ஒன்றுமே இருக்காது. ஒருகால் தவறி இருந்தால் இரண்டு மூன்று நாளான பழம் கஞ்சிதான் இருக்கும். அதுவும் அதிலே உப்புக்கூட இருக்குமோ என்னவோ! இதோ தோற்றமளிக்கிறதே எழில்மிகும் மாளிகை. இதில் எத்தனையோ வகை உணவுகள் இருக்கலாம். அவைகளில் நறுமணம் கமழலாம். அறுசுவை குழைந்திருக்கலாம். எனவே நாம் இதிலேதான் நுழைந்தாக வேண்டுமென நினைத்து, நாவைத் தடவிவிட்டுக்கொண்டு, உமிழ்நீரைச் சுரக்கவைத்துக்கொண்டு, அந்த உப்பரிகையின் உள்ளே சென்றார். சென்றவர் சிறிது நேரம் கூட உள்ளே தங்காமல் சுவரில் மோதிய பந்தைப்போல உடனே வெளியே ஓடிவந்து சுரந்திருந்த உமிழ்நீரையெல்லாம் கூட்டி 'தூ' என்று காரியுமிழ்ந்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வந்துவிட்டார். காரணம், அங்குகண்ட காட்சிகள் முன்பு அவர் கொண்ட எண்ணத்திற்கு முற்றிலும் முரண்பட்டு இருந்ததேயாகும். அறுசுவை உணவிற்குப் பதில் அழுகல் நாற்றம் வீசும் அருவருப்பான உணவையும், அந்த மாளிகையில் இருக்கும் அத்தனை பேரும் தொழுநோயால் பீடிக்கப் பட்டிருப்பதையும் கண்டுதான் அவர் பாம்பைக் கண்டவரைப் போலப் பதறித் திரும்பிவிட்டார். பசியோ அவருக்கு அளவையும் மீறிவிட்டது. அவரையும் அறியாமல் அவரது கால்கள் அடுத்த பக்கம் இருந்த குடிசைக்கு நடந்திட்டது. அங்கு அவர் கண்டது, அந்தக் குடிசையைப்பற்றி முன்பு அவர் கொண்ட கருத்திற்கு அத்தனையும் புறம்பானது. உள்ளன்பு உள்ள—தன் உயிரையே தரவல்ல உழைப்பாளி ஒருவர் அவரை எதிர்கொண்டழைத்திட்டார். தன் உழைப்பின் பெருமையை உணர்த்தும் அறுசுவைப் பண்டங்களை அன்போடு படைத்திட்டார். புசித்தார் பசித்தவர். பின்பு நடந்திட்டார் விடைபெற்று, நல்ல உள்ளம் கொண்ட அந்தக் குடிசைவாசிக்கு நன்றி கூறிய வண்ணம். அன்று முதல் அவர் அவ்வழி வர நேரும் போதெல்லாம் அக்குடிலுக்குச் சென்று உழைப்பாளியோடு அளவளாவி அறுசுவை உண்டு களிமிகக் கொண்டு பின்னர் வழி நடந்திடுவதையே வாடிக்கையாக்கிக் கொண்டார். அவ்விதம் அவர் அவ்வழியாக அநேகம் முறை வரும்போது அவரது கண்கள் மண்குடிசைக்கு எதிரேயுள்ள மாளிகையை மறந்தும்கூடப் பார்ப்பது இல்லையாது. இதை முதலிலிருந்தே கண்ணுற்றுவந்த மாளிகை வாசிகளான தொழுநோயாளிகள் வழிப்போக்கர்மீது வெறுப்புக்கொண்டுவிட்டதோடு; வயிற்றெரிச்சல் தாங்கப் பெறும் மண் குடிசை உழைப்பாளியை வாய்க்கு வந்தபடியெல்லாம் வையவும் வசைபாடவும் ஆரம்பித்து விட்டார்கள்.

இதே நிலையில்தான் மாளிகை வாசிகளாக இருக்கும் காங்கிரசார் மண் குடிசை வாசிகளைப் போன்ற நம்மைப் பார்த்து கொதிக்கவும் சீறவும் ஆரம்பித்து விட்டார்கள்.

நல்ல மனதோடு குடிசையிலே நறுமணம் கமழும் நல்லுணவும் சேர்ந்துவிட்டபடியால் அவ்வுணவை இனிதுண்டு மகிழ்ந்ததோடு, இன்முகத்தோடு விருந்தோம்பிய அந்த உழைப்பாளியை இதயத்திலே படம்பிடித்து வைத்துக்கொண்டார் என்பதில் வியப்பேதும் இல்லையல்லவா. அதைப் போலவேதான் நமது முழக்கங்களிலே விளக்கங்களிலே முத்தான மொழிவளத்திற்கிடையே சத்தான கருத்துக்கள் மணம் வீசுகிறது. மனம் சரி என்று தீர்ப்புச் சொல்லக்கூடிய மதிநலம் கொண்ட கருத்துக்களிலே மயில் நடை பயிலும் மொழி வளமும் ஏறுநடைபோடும் எதுகை மோனைகளும் இணைந்து விளையாடுகிறது. பாலுடன் தேனும் கலந்துவிடும்போது பருகிட அதனை எவர்தான் விரும்பார். இக்கோலத்தைக் காணும்போதுதான் கோலோச்சவந்த சீமான்களுக்கும் கோபம் கொப்பளித்துக்கொண்டு 'வந்துவிடுகிறது'. கொதித்துக்கொதித்து வீழ்கிறார்கள் நம்மீதும் நமது கூட்டங்களுக்கு வருகை தரும் மக்கள் குழாம்மீதும். பங்களா வாசிகள் பாட்டாளிமீதும் பாதசாரிமீதும் பாய்ந்து வீழ்ந்ததைப்போல.

இப்போது நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள், குறிப்பாகச் சென்னைத் தேர்தல் முடிவு, காங்கிரஸ் தோழர்களை இனிமேலாவது நல்ல வழிக்குத் திருப்பும் என்று நம்புகிறோம்.

—வேலன்

தலைநகர்கள் கற்பிக்கும் பாடம்

அன்புள்ள எழிலி!

வணக்கம்! கன்னத்தில் கைவைத்துக் கவலையோடு அமர்ந்திருப்பாய் இந்நேரம் உங்கள் ஊரில் ஏற்பட்ட நிலைகண்டு என்று எனக்குத் தெரியும்—இருப்பினும் எழிலி, அந்தத் துக்கத்தையெல்லாம் ஒரே நொடியில் அகற்றிவிடும் செய்தியை நான் உனக்கு எழுத விரும்புகிறேன். செய்தி என்றால் சாதாரண செய்தி என்று நினைக்கவேண்டாம். இன்பமான செய்தி! என்றும் மறக்கமுடியாத செய்தி!

முக்கனியின் சாறு என்றாலே எவ்வளவு இனிக்கும் என்று உனக்குத் தெரியும் — அதோடு! தேனையும்—சாதாரண தேன்கூட அல்ல-மலைத்தேனையும்சேர்த்தால் எவ்வளவு இனிக்கும்! அவ்வளவு இன்பமான செய்தி நான் சொல்லப்போவது!

எழிலி! இதுவரை நம்மைக் கண்டு ஏளனம் புரிந்தோர், எள்ளி நகைத்தோர், கணை தொடுத்தோர் ஏராளம்—ஏராளம் —ஆனால் அவர்கள் யாவரும் இன்று வியப்புற்று, விழிப்புணர்ச்சிகொண்டு நம்மைப் பார்க்கும் நிலை ஏற்பட்டுவிட்டது! சரித்திரம் கண்டிராத ஒரு புதிய அத்தியாயத்தை நாம் ஏற்படுத்திவிட்டோம்!

இந்தப் புதிய திருப்பம் நம் திருநாட்டில் மாத்திரம் இல்லை! ஒட்டவைத்துக்கூறும் அகில 'ஒட்டு' இந்தியாவிலேயே ஏற்பட்டிருக்கிறது.

என்ன என்று யோசிக்கிறாயா! அப்படி நாடு முழுவ[illegible] புரட்சி ஏற்பட்டிருக்கிறது என்று யோசிக்கிறாய்! ஒரு சமயம் மாஸ்டர் தாராசிங்கின் உண்ணாவிரதத்தையும், ஒரிஸாவில் நடக்க இருக்கும்கூட்டாட்சியையும்பற்றிக்கூறுகிறேனா என்று யோசிக்கிறாயா— அல்ல! அல்ல! அவைகள் எல்லாம் அல்ல!

இராமலிங்கம்

ஒருபத்து ஆண்டுகளாக, இறுமாப்புடனும், ஆணவச் செருக்குடனும், ஆதிக்க வெறியுடனும் ஆட்சி செலுத்திவரும் இந்தக் காங்கிரஸ் கட்சியைத்தான் சொல்கிறேன்!

மகாத்மா காந்தியால் பேணி வளர்த்துத் தந்த அதே காங்கிரசைத்தான் சொல்கிறேன்!

என்ன காங்கிரசுக்கு! அலகாபாத் அருந்தவப் புதல்வர்தானே அன்றும், இன்றும் அகில பாரதத்தின் முதன் மந்திரி! அவர் திருமகள்தானே இன்று காங்கிரஸ் கட்சிக்கே தலைவர்! அவர்கள் கட்சிக்கு என்னகுறைவு! அன்று தியாகிகள் இருந்த கட்சி இன்று டாடாக்களும், பிர்லாக்களும், டி. டி. கே-க்களும் போன்ற செல்வந்தர்கள் இருக்கின்றார்களே! அப்படிப்பட்டகட்சிக்கு எதில் குறைவு என்று யோசிக்கிறாயா!

அதைத்தான் நானும் சொல்ல விரும்புறேன் எழிலி! அகில'ஒட்டு' இந்தியாவின் தலைநகரம் டில்லி— வங்கத்தின் தலைநகரம் கல்கத்தா —பம்பாய் மாகாணத்தின் தலைநகரம் பம்பாய்! — தெரியாதது அல்ல. தெரிந்தது தான்! இவைகள் சாதாரண நகர்கள் அல்ல. தலைநகர்கள்! அந்தத் தலைநகர்கள்தான் காங்கிரசுக்குச் சாவுமணி அடித்திருக்கிறது!

எழிலி, உன் விழிகளில் தோன்றும் விழிப்பு எனக்குத் தெரிகிறது! தலைநகர்கள் என்ன செய்தன என்று யோசிக்கிறாய்! எழிலி! இந்தத் தலைநகர்களிலெல்லாம் மேயராக அமர்ந்திருப்பவர் யார் தெரியுமா! காங்கிரஸ்காரர்கள் அல்ல! மாற்றுக்கட்சிக்காரர்கள்தான்! இப்படித் தலைநகர்கள் எல்லாம் காங்கிரசுக்கு இடமில்லை என்று முன்கூட்டியே அறிவித்துவிட்டன!

இவைகள் எல்லாம் வடநாட்டில்தானே! நம் திருநாட்டில் என்ன, என்று கேட்கவேண்டும் போல் தோன்றுகிறது! எழிலி! கனகவிசயர் கூட்டத்திற்கே காங்கிரசின் போக்குப் புரிந்துவிட்டது என்றால், நெடுஞ்செழியன் பரம்பரைக்கு சொல்லவா வேண்டும்! வெற்றிமேல் வெற்றி நமக்குக் கிடைத்திருக்கிறது!

நம் தலைநகரில் நடந்த தேர்தலில் நூறு இடங்களில் போட்டியிட்டு, முப்பத்துஏழு இடங்களில்தான் வெற்றி பெற்றிருக்கிறது காந்தியார் பேணிவந்த காங்கிரஸ் —இன்று காமராசர் கட்டிக்காக்கும் காங்கிரஸ். ஆனால் தொண்ணூறு இடத்தில் மட்டும் போட்டியிட்டு நாற்பத்தைந்து இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது நம் கழகம்.

என்ன எழிலி திகைக்கிறாய்! நாம் போட்டியிட்ட இடமோ தொண்ணூறுதான் — வெற்றி பெற்றதோ நாற்பத்தைந்து! எப்படி நமக்கு இவ்வளவு வெற்றி

கிடைத்துவிட்டது! மந்திரமா! மாயமா! அல்லது கண்கட்டு வித்தையா என்று யோசிக்கிறாயா! இதற்கெல்லாம் காரணம் நாட்டில் நாம் மக்களிடம் ஏற்படுத்தியுள்ள விழிப்புணர்ச்சிதான்.

நமக்குக் கிடைத்திருக்கும் இந்த வெற்றி சாதாரண வெற்றியல்ல! சரித்திரமே கண்டிராத மாபெரும் வெற்றி! ஏன் தெரியுமா எழிலி நான் இதைச் சொல்கிறேன்!

அண்ணன் அடிக்கடி நம் கழகத்தைப்பற்றிக் கூறும்போதெல்லாம் "நம் கழகம் இப்போதுதான் கன்னிப் பருவத்தில் இருக்கிறது— அதனால்தான் எல்லோர் கண்ணோட்டமும் நம்மேல் விழுகிறது" என்று சொல்வார்! அதுபோன்று நம்மை எதிர்த்தோர் பட்டியலில் யார் இல்லை? நாட்டிலுள்ள கட்சிகள் அத்தனையும் நம்மை வெவ்வேறு கோணங்களில் இருந்து தாக்கிக்கொண்டுதான் இருந்தன! இருப்பினும் நமக்குத்தான் வெற்றி கிடைத்திருக்கிறது!

அண்மையில் சென்னையில் நடந்த தேர்தல் பிரசாரத்தில், காங்கிரசைச் சேர்ந்த ஓர் கண்ணியவான் நம் கழகத்தைப்பற்றி என்ன பிரசாரம் செய்தார் தெரியுமா "தி.மு.க-வுக்கு ஓட்டுப்போட்டால் நாட்டில் கொலையும் கொள்ளையும் அதிகரிக்கும்! ஆகவே தி.மு.க-வுக்கு ஓட்டு போடாதீர்கள் என்று." உண்மையிலேயே இதைப் பேசியவர் கண்ணியவானாக இருந்தால், நாட்டில் இன்றைய நிலைமை நினைத்துப் பார்க்கட்டும். கொலையும் கொள்ளையும் யார் காலத்தில் அதிகம்! வெள்ளைக்காரன் காலத்தில் இருந்ததைவிட இன்றுதானே பெண்கள் மானத்தைவிற்கும் நிலை பெற்று அதிகமாக உலவுகிறார்கள்! இந்த அழகிலே இதைப் போற்றி வளர்க்கவோ என்னவோ தான் "உஷார் விடுதிகள்" ஏற்படுத்தியிருக்கிறார்கள்! பெண்கள் ஏன் இப்படி ஆனார்கள் என்று கண்டறியமுடியாத இந்த அரசாங்கம், தவறி விழுந்தவர்களுக்கு விடுதி ஏற்படுத்தியிருப்பதன் பயன் என்ன?

என்னவோ சொல்வார்கள் "கண்கள் போனபிறகு சூரிய வணக்கம் ஒரு கேடா" என்று. அதுபோன்று இன்று சமுகம் சீர்கெட்ட நிலைக்கு வருவதற்குக் காரணமாயிருந்த காங்கிரசுக்கு தலைநகர்களெல்லாம் சரியான பாடம் கற்பித்துவிட்டன!

பழுத்த பழம்தான் இனிக்கும்! நல்ல அனுபவமுடையவர்கள்தான் நன்றாகப் பொறுப்புடன் பணி செய்வர் என்று இவ்வளவு ஆண்டுகளாக எண்ணித்தான் இதுவரை மக்கள் ஆதரித்தார்கள் காங்கிரசை! ஆனால் இன்று புரிந்துவிட்டது இது பழுத்த பழமாத்திரமல்ல, புழுத்த பழம் கூட என்று! நன்றாகப் பழுத்து இனிப்புடன் இருந்த காரணத்தினால் புழுக்கள் அதனுள் நிறையச் சேர்ந்துவிட்டன! அதுபோன்று நல்ல செல்வாக்குடன் இருக்கும் கட்சி என்ற காரணத்தில் பல பணமூட்டைகள் அதில் சேர்ந்துவிட்டன! ஆகவேதான் இன்று பணப் பெருச்சாளிகள் உலவும் காங்கிரஸ் கட்சி செல்லரித்த மரமாகிவிட்டது!

எழிலி! செல்லரித்த மரம் என்றவுடன், நீ அடிக்கடி நம்மைப்பற்றி உங்கள் ஊரில் யாரோ ஏளனமாகச் சொல்லுவார் என்று கூறுவாயே, அது ஞாபகத்திற்கு வருகிறது! நீயும் என்னை அடிக்கடி கேட்டிருக்கிறாய் நம்மைக் காளான்கள் என்கிறாரே, நாம் என்ன சொல்வதென்று! எனக்கும் பதில் சொல்லத் தகுந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை! இப்போது கிட்டிவிட்டது!

எழிலி! நீ தாவர நூல் படித்திருப்பாய்! நம்மைக் காளான் என்று சொன்ன அந்தப் பெருமகனார் படித்திப்பாரோ இல்லையோ எனக்குத் தெரியாது! காளான்கள் எங்கு வளரும் தெரியுமா! சாதாரணமாகப் பட்டுப்போன, செல்லரித்துப்போன மரங்களின்மீதோ, அழுகிப்போன பண்டங்களின்மீதோதான் வளரும்! அதேதான் எழிலி! அவர் சொல்லுவதிலும் உண்மையிருக்கத்தான் இருக்கிறது! காளான்கள் நாம்—உண்மைதான்! ஆனால் எங்கு வளர்கிறோம்! இன்று செல்லரித்த மரமாக, அழுகிய பண்டமாக, கருகிவிழும் கோட்டையாக இருக்கும் அந்தக் காங்கிரசின் மேல்தான் வளருகிறோம்! அவனை யறியாமலே அவர் உண்மையைக் கூறிவிட்டார்!

அப்படி அல்ல "நான் சொன்னது காளான்கள் மிகவும் விஷமானது, கொடியது, வேண்டாதது" என்று பொருள்படச்சொன்னேன் என்று அவர் நினைத்துக்கொள்ளலாம்! ஆனால் எழிலி இன்று தீராத நோய்களை எல்லாம் தீர்த்து வைக்கும் மாமருந்தாக விளங்கும் பென்ஸிலின் போன்ற மருந்துகள் யாவும் ஒரு வகை காளான்கள்தான். இன்னும் அவர்கள் அழுத்தம் திருத்தமாக அப்படி நம்மைக் காளான்கள் என்றால், உண்மையிலே இன்று காங்கிரஸ்காரர்களால் சீர்கெட்டிருக்கும் இந்த சமுதாயத்திற்குப் பென்சிலின் போன்ற காளான்களாகிய நாம் அத்யாவசியமானதுதான் என்று சொல்லுவேன்!

இவை எல்லாவற்றையும் ஏன் இன்று சொல்கிறேன் என்றால், இதுவரை இறுமாப்புடனும், செருக்குடனும் இருந்த காங்கிரஸ் இப்போதுதான் நிலமைகளைப் பார்க்க ஆரம்பித்திருக்கிறது. இனி ஆணவத்திற்கு இடமில்லை, ஆதிக்கவெறிக்கு அடங்குவோர் யாரும் இல்லை என்று தெரிந்துவிட்டது.

தலைநகர் எல்லாம் பாடம் கற்பிக்கிறது, தவறிப்போன கண்ணியவான்களுக்கு! உண்மையிலேயே அவர்கள் கண்ணியவான்கள், காந்தியாரின் நெறி தவறாத சீடர்கள் என்றால், இனிமேலாவது காந்தியார் சொன்ன வாக்குப்படி நடக்கட்டும்! காங்கிரசை கலைக்கட்டும். அதுவே அவர்களுக்கு உள்ள நாணயமான ஒரே வழி.

அன்புள்ள,

இன்பன்

★

காரணம்!

"புத்திசாலிகள் இப்போது கொஞ்சம் கொஞ்சமாகக் காங்கிரசிலிருந்து விலகும் காரணத்தினால், கார்ப்பரேஷன் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோற்றுவிட்

—காமராஜர்.

வீராங்கனை--வெர்சாரி ஐரிஸ்

சென்ற இதழ் தொடர்ச்சி...

ஐரிஸின் நிலை அப்படியென்றால் பிரிவினைக் கூட்டத்தின் நிலை மிகவும் மும்முரமாக இருந்தது. நேருக்குநேர் போர் புரியவேண்டிய சூழ்நிலை உருவாகிவிட்டது.

சில்வியோவின் நண்பன் அட்ரியானோ படையினை நடத்த வந்துவிட்டான்.

தன் காதலிக்குத் தன் பிரிவைக் கூறிவிட்டு வந்துவிட்டான் அட்ரியானோ.

"நான் சில்வியோவுடன்சேர்ந்து போர்புரியவேண்டிய காலம் வந்துவிட்டது. இப்புகைப் படத்தை வைத்துக்கொள்; நான் இறந்துவிட்டால், கொஞ்சநாட்கள் என்னை நினைவில் வைத்துக்கொள்—நான் கோழையல்ல என்பதை நிரூபிக்கச் செல்கின்றேன்"

அட்ரியானோ வந்ததும் துருப்புக்களின் தன்மையே மாறுதலுற்றது.

சில்வியோ செயல்வீரன் என்றால், அட்ரியானோ அதன் ஆரம்பகர்த்தா! சில்வியோவின் பெயர் தைரியத்திற்கும் வீரத்திற்கும் எடுத்துக்காட்டெனின், அட்ரியானோவின் பெயர் ஒழுக்கத்திற்கும், தத்துவ ஞானத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கிற்று.

திறந்த வெளியில் போர் வீரர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். வானத்தையே உற்று நோக்கிய வண்ணம் ஐரிஸ் படுத்திருந்தாள். அவள் உள்ளம் நிம்மதியின்றித் தவித்தது. பெற்றோர்களைப்பற்றிய தகவல் ஒன்றும் தெரியவில்லை. தம்பி தங்கைகளைச் சில வாரங்களாகப் பார்க்கவில்லை. விடாத போரினால் சாவுகளைப் பார்த்த வேதனை ஒருபுறம். சில்வியோவைப் பார்க்காத வேதனை மறுபுறம், நினைவுகள் சிதறின. நகரத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்தான் சில்வியோ. வந்த சில வினாடிகளுக்கெல்லாம் சில்வியோ தன் அருகே இருப்பதை உணர்ந்தாள் ஐரிஸ்.

"என்னுடன் வா" என்று மெல்லக் கூறிக் கூடாரத்தைத்தாண்டி நடந்து சென்றனர்.

இதழோடு இதழ் சேர்ந்தன. நெடுநேரம்வரை அவர்கள் பேசவேயில்லை — பேசத் தேவையில்லை.

சுகுணா

அந்த இரவிற்குப்பின் எத்தனையோ நாட்களுக்கு—ஏன் வாரங்களுக்குச் சந்திக்க முடியாதென்று அவர்களுக்கு நன்கு தெரியும்.

ஜூலை 16ந் தேதி......!

சில்வியோவின் கூட்டம் — 53 ஆட்கள் கொண்ட கூட்டம் மலையினை அடைந்துவிட்டனர், போர்க் கருவிகளுடன்... வெடிகுண்டுகள், பெரிய இயந்திரத் துப்பாக்கிகள் அனைத்தையும் மறைவாகப் பதுக்கினர்.

மறுநாள் காலை ஆறு மணிக்கு நாஜிப் படை சூழ்ந்து வருவதைக் கண்டனர். அட்ரியானோவின் தலைமையில் பத்துஆட்கள், சில்வியோவின் தலைமையில் பத்து ஆட்கள், ஐரிஸின் தலைமையில் பத்து ஆட்கள் என்று பிரிந்து எதிரிப் படையுடன் போரிட்டனர்.

மூன்று மணி நேரம் இடைவிடாத சண்டை. ஐரிஸின் இடது காலில் வெடிகுண்டு பாய்ந்து தள்ளாடினாள். உடனே சில்வியோ வந்து உதவிசெய்ய முற்பட்டான்.

"போ, போ, உன் இடத்திற்குப் போ" எனக் கூறி அனுப்பிவிட்டாள் ஐரிஸ்.

வெடிகுண்டுகளும், இயந்திரத் துப்பாக்கியும் இருந்த இடத்திற்கு எதிரிப்படைகள் செல்வதைப் பார்த்த சில்வியோ, அவர்களுக்கு முன் அவ்விடத்தை அடைந்து சுட ஆரம்பித்தான்.

வெடிகுண்டுகள் வெடித்தன—எதிரிப்படை ஓடின — மாண்டன. விடுதலை வீரர்களுக்கு-பிரிவினைக் கூட்டத்திற்கு பிரமாதமான வெற்றி — இதுவரை அடைந்திராத வெற்றி.

லாவேன் மலையில் நடந்த இந்த வெற்றி எங்கும்பரவிற்று. ரேடியோ மூலம் ஒலிபரப்பப்பட்டது. பத்திரிகைகள் வெளியிட்டன.

ஐரிஸ் துடித்துக்கொண்டிருந்தாள். சில்வியோ, ஒரு பேனாக் கத்தியால் குண்டு பாய்ந்த இடத்தைக் கீறி, குண்டை வெளியேற்றும் போது அவள் குடல் புரண்டது.

"அட்ரியானோ, நீ பெரிய வீரன்- இந்த வெற்றி உன்னுடையது, என்னுடையதல்ல" என்று கூறினான் சில்வியோ.

லாவேன் மலையிலிருந்து, கூடாரத்திற்குத் திரும்பியதும் திடுக்கிடும் சேதி ஒன்று காத்துக்கிடந்தது.

பிராங்கோ ரோஸி என்ற இளைஞன், புதிய போர்க்கருவிகளின்

சூட்சமத்தைக் நடத்திச் சென்று விட்டான்!

காட்டிக்கொடுக்கும் கயவனுகி விட்டான் பிராங்கோ ரோஸி!

ஆகஸ்டுத் திங்கள் 20-ம் நாள் போருக்குச் செல்வதென முடிவு. அதற்குள் இச்செய்தி பேரிடியாக இருந்தது.

சமையல் அறை மேசைமீது ஓர் துண்டுக் கடிதம் கிடந்தது.

அன்புள்ள சில்வியோ,

கைத்துப்பாக்கி ஒன்றையும்' இயந்திரத் துப்பாக்கி ஒன்றையும் நான் திருடிக்கொண்டு போனதற்காக மிகவும் வருந்துகிறேன்—என் சொந்த விவகாரத்தைச் சரிப்படுத்தவே நான் திருடினேன். விரைவில் உன்னைச் சந்திப்பேன்.

அன்புள்ள
பிராங்கோ

ஐரிசுக்கு ஒன்றும் புரியவில்லை' குழப்பத்திற்குள்ளானுள்.

அட்ரியானேவின் நண்பன் கூறினுன்:—

"சில்வியோ, இன்று இரவே நாம் இங்கிருந்து சென்றுவிட வேண்டும். ரோஸி எப்படியும் நமக்குத் துரோகம் செய்வான் என்பது நிச்சயம்" என்றுன்.

"அவசரப்படாதே! அட்ரியானே வரும் வரை நான் இங்கிருந்து நகரமாட்டேன். ரோஸியை எப்படியாவது பிடித்துவர முயலுங்கள்" என்றுன் சில்வியோ.

"சில்வியோ, கெஞ்சுகிறேன் நான். என் உள்ளுணர்வு எதையெல்லாமோ நினைக்கின்றது. புறப்பட்டுவிடு, இங்கிருந்து" என்றுன் நண்பன்.

"இல்லை. இப்போது புறப்படக்கூடாது நான்"

"சரி! உன் விருப்பம்! நாளைக் காலை சந்திக்கின்றேன் — நீ உயிருடன் இருந்தால்!

இவ் வார்த்தைகளோடு வெளியேறிவிட்டான் நண்பன்.

சில்வியோவும் ஐரிசும் மேல் மாடியில் இருந்தனர்.

"சில்வியோ......தூங்குகிறுயா!" ...முணுமுணுத்தாள் ஐரிஸ்.

"இல்லை......"

"சில்வியோ, நண்பன் கூறியபடி நாம் சென்றுவிட்டிருக்கலாம்"

"ஏன் அப்படி நினைக்கிருய்?"

"ஏனே! அப்படித் தோன்றுகிறது"

"நீ கற்பனை செய்துகொண்டிருக்கிருய். தூங்க முயற்சி செய்"

சிறிது நேரம் அமைதியில் ஆழ்ந்தனர்.

பிறகு ஐரிஸ், சில்வியோவின் அருகில் அமர்ந்து தலைமுடியைக் கோதியவண்ணம், "போர் யாவும் முடிந்தபின் நீ என்ன செய்யப் போகின்றுய்?"

"இயந்திர வேலைக்குச் செல்வேன் எனக் கருதுகின்றேன். காரணம் எனக்குத்தான் போதிய படிப்பில்லையே?"

வளைந்து முத்தம் கொடுக்கச் செல்லும்போது, ஐரிஸின் கண்களினின்றும் பெருகிய கண்ணீரைக் கண்டு, "ஏன் அழுகிருய், ஐரிஸ்" என்றுன்.

அழுவதன் காரணம் சில்வியோவிற்கு நன்கு தெரியும். எதிரிகளின் பிடியில் சிக்கிக்கொண்டால் ......!

ஐரிஸ் தொடர்ந்தாள்:—

"நாம் என்னவோ வாழ்வோம் என்ற நம்பிக்கை எனக்கில்லை, சாவதற்காக நான் துளியும் அஞ்சவில்லை. ஆனுலும் வாழ்ந்து உன் குழந்தைகளை நான் பெறவேண்டும் என்ற விருப்பத்தை அழித்துக்கொள்ள முடியவில்லை..."

"நிச்சயம்! நீ அப்படியே செய்வாய் கண்ணே"

சில்வியோவின் தோள்களின் மீது சாய்ந்து உறங்கிவிட்டாள் ஐரிஸ்.

விடியற்காலை 4-மணிக்கெல்லாம் பணியாள் ஒருவன் வந்து போருக்குப் புறப்பட எழுப்பினுன்.

இன்னும் ஒருமணிநேரம் கழித்துவா எனக் கூறிவிட்டான் சில்வியோ.

அட்ரியானேவிடம் சென்றுன் பணியாள். அவனும் அப்படியே கூறிவிட்டான். தூக்கக் கலக்கம்!

ஐந்து மணிக்கு எழுந்தபோது' தன் கழுத்தின் பின்னுல் துப்பாக்கியை நீட்டிப் பிடித்தவண்ணம் ஒருவன் நின்றிருப்பதை உணர்ந்தான்.

அந்த வீடு பூராவும், சில்வியோ' அட்ரியானே, ஐரிஸ், பிரிவினை வீரர்கள் சிலர் உட்பட அனைவரும் முற்றுகை இடப்பட்டுள்ளனர் என்பதை அந்த விடியற்காலை ஒளி நன்கு காட்டிற்று.

ரோஸின் துரோகம் வேலை செய்துவிட்டது. இனித் தப்பமுடியாது சில்வியோவும் அட்ரியானேவும்!

—[5]—
வீரத்தின் விலை!

ஐரிசும், சில்வியோவும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர். கைத்துப்பாக்கியைக் கையில் எடுத்துக்கொண்டாள் ஐரிஸ். இருவரும் சாளரத்தின் வழியே குதித்துக் கீழே இறங்கினர்

காலின் வலியோ தாளமுடியவில்லை ஐரிஸால். முன்னுள் பாய்ந்த குண்டு ஏற்படுத்திய வலி, கீழே குதித்ததால் மிகுதியாயிற்று. இருந்தும், முன்னேறி வரும் படைகளை முடிந்தவரை சுட்டுத் தள்ளினுள்.

'அட்ரியானே, ஓடு, ஓடு' என எச்சரித்தான் சில்வியோ. எங்கும் வெடிச்சத்தம்.

சில்வியோவை நான்கைந்து வீரர்கள் சூழ்ந்துகொண்டனர்.

இயந்திரத் துப்பாக்கி இருக்குமிடத்தை நோக்கி விரைந்தாள் ஐரிஸ்.

அட்ரியானே புதரினிடை பதுங்க ஓடினுன், சில்வியோவையும் ஐரிஸையும் காப்பாற்ற!

தன் உயிர் முக்கியமல்ல அட்ரியானேவிற்கு!

கண் இமைக்கும் நேரத்திற்குள் சில்வியோ குப்புற வீழ்ந்தான். மீளமுடியாத நிலை! குண்டொன்று பாய்ந்தது! துரோகத்தின் முடிவு சில்வியோவைக் குப்புறத் தள்ளிற்று!

ஐரிஸால் நிலைமையை நன்கு உணர முடிந்தது. அதுதான் சில்வியோவின் முடிவு! சில்வியோ மாண்ட பிறகும் அவளுக்கேன் வாழ்வு!

"சில்வியோ! பார் இதோ! பழிவாங்குவேன்" எனச் சுட்டுக்கொண்டே இருந்தாள். வெறி பிடித்தவள் ஆனுள். விடாது சுட்டவண்ணமிருந்தாள்.

எவ்வளவு நேரம் சுடமுடியும்? ரவை தீர்ந்துவிட்டது.

"நானும் உன்னுடன் வருவேன் கண்ணாளா" என்று அவன் அருகே சென்றாள்.

"வீரத்தின் விலை உன் மாணத்தோடு தீர்ந்துவிடுவதில்லை—என்னையும் அழைத்துக்கொள்"

அவனை அவளை மாய்த்துக் கொண்டாள்.

ஐரிஸ் பிணமானாள்!

இன்னும் சிறிது விநாடிகளில் பிணமாகப்போகும் சில்வியோவின் உடலில் கொஞ்சம் உயிர் இருப்பதை உணர்ந்த அட்ரியானோ, அவனைச்சுமந்துகொண்டு புதருக்குள் ஓடினான்.

ஆனால் அவனை ஜெர்மானியப் படை சூழ்ந்துகொண்டது.

அட்ரியானோவின் கரங்கள் கட்டப்பட்டன. கன்னத்திலே அறைகள்! கழுத்தில் கயிறைக் கட்டி வீதி வழியே இழுத்துச் சென்றனர் இராணுவப் படையினர்!

அட்ரியானோவின் தலை குனிய வேண்டுமே! குனியாது-அது வீர முகம்—அம் முகத்தில் வீரம் விளையாடிற்று. அந்த முகத்தில் அச்சம் சிறிதும் இல்லை! வெறுப்பு—மறக்க இயலாத வெறுப்பு—துரோகி ரோஸியால் ஏற்பட்ட வெறுப்பு—இதுதான் அம் முகத்தில் இருந்தது!

ஒவ்வொரு அடி தாண்டும் போதும் ஒவ்வோர் சவுக்கடி.

வழியே குடியிருப்போர் அனைவரும் வெளிவந்து இவ் வேதனைக் காட்சியினைக் கண்டனர்--நிமிர்ந்து செல்லும் முதுகைக் கண்டனர்—முதுகிலிருந்த போர்க்'காயங்களைக் கண்டனர் — காயங்களிலிருந்து பெருகி வரும் குருதியினைக் கண்டனர். கண்ணீர் விட்டனர்.

துரோகி பிராங்கோ ரோஸி சிலரை அழைத்து வந்து "பார்! விடுதலை வீரர்களின் வீரத்தை" என்று ஏளனம் செய்தான்.

அட்ரியானோவின் உடலெல்லாம் இரத்தம் கொதித்தெழுந்தது. என்ன செய்யமுடியும்? கட்டப்பட்ட கரங்கள் — சாவை நோக்கிச் செல்லும் நடை!

இருந்தாலும் கேட்டான்:—

"துரோகி! கடைசியில் எங்களை வஞ்சித்தே விட்டாய்"

"ஆம்! ஆம்! அன்று கூறியபடி உங்களை முடித்துவிட்டேன்" என்று கூறியதோடன்றி முகத்தின் மீது துப்பினான் ரோஸி!

"இன்னும் கொஞ்ச நேரத்தில் தூக்கில்தொங்கப்போகிறாய், தெரியுமா?"

"போரின் பரிசு-வீரத்தின் விலை—வெற்றியின் அச்சாரம்" என்றான் அட்ரியானோ.

தூக்கு மேடையை அடைந்தாகி விட்டது. கீழே விழுந்து கிடந்த சில்வியோவின் நெற்றியின் மீது ஓர் முத்தம் தந்தான் அட்ரியானோ. "என் உயிர் நண்பனே, போகிறேன்-திரும்பி வரமுடியாத இடத்திற்குப் போகிறேன்"

அட்ரியானோ தன் கரங்களை அவிழ்த்து விடும்படி வேண்ட, கட்டவிழ்க்கப்பட்டது. அந்தக் கயிற்றைத் தன் கரங்களாலேயே தன் கழுத்தில் மாட்டிக்கொண்டான்.

மக்கள் அழுதனர்!

நிமிர்ந்து நின்றான் அட்ரியானோ! வலிய தொண்டையில் உரக்கக் கூறினான்! "உண்மையான இத்தாலியனாகச் சாவதில் பெருமை கொள்கிறேன். வாழட்டும் இத்தாலி!"

அட்ரியானோ பிணமானான்.

ஏற்கனவே மாண்டுபோன சில்வியோவும் ஐரிஸும் தூக்கிலிடப்பட்டனர்.

பிணங்கள் தொங்கிற்று!

ஆகஸ்ட் 20ந் தேதி மூன்று வீர உடல்கள் துண்டாடப்பட்டன!

கல்லறைக்கு வெளியே புதைக்க ஏற்பாடாயிற்று.

கல்லறை அதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க, கல்லறைக்குள் புதைக்க ஒப்புக்கொண்டனர்; ஆனால் ஓர் நிபந்தனையுடன்.

அம் மூவரின் கல்லறையின் கீழ் ஏதும் எழுதக்கூடாது. எந்தக் குறிப்பும் இருக்கக்கூடாது. அவர்கள் பெயர்களும் இருத்தல் கூடாது!

காரணம் அந்தப் பெயர்கள் ஓராயிரம் சில்வியோக்களை உற்பத்தி செய்துவிடுமோ என்ற அச்சம், அக்கிரமக்காரர்களுக்கு!

ஆனாலும் கல்லறை அதிகாரி யாரும் அறியாவண்ணம் ஓர் அடையாளம் வைத்துவிட்டு, காலடியால் அளவெடுத்துக் கொண்டு குறித்துக்கொண்டார்.

சில்வியோ விட்டுச் சென்ற பணியினைத் தொடர்ந்தான் சகோதரன். படை தயாராயிற்று' பிரிவினைக் கூட்டம் பெருகிற்று.

1944ம் ஆண்டு நவம்பர் திங்கள் 9ம் நாள் விடுதலை பெற்றனர் பிரிவினை கூட்டத்தினர்-பிரிவினைக் கீதம் இசைத்தனர்.

துரோகி பிராங்கோ ரோஸி நாட்டை விட்டு ஓடி, பிரான்சு இராணுவத்தில்சேர்ந்துவிட்டான்.

அட்ரியானோவின் தந்தை, மகனுக்கு நேர்ந்ததை அறிந்து அதிர்ச்சியால் மாண்டார். தாய் இன்னும் வாழ்கின்றாள். அரசினர் கொடுக்கும் 'பென்ஷன்' மூலமும், 'அட்ரியானோ பொன் பதக்கம்' அளிக்கும் இருபது பவுன் வருமானத்தினாலும்!

ஐரிஸின் தாய் ஜெர்மனியிலிருந்து வந்தாள். மகள் மாண்டதை எண்ணிக் கதறிற்று தாயுள்ளம்!

அவளுக்கும், அவள் குழந்தைகளுக்கும் உதவியளித்தது, கம்யூனிஸ்ட் அரசாங்கம். உதவிக்குப் பதிலாக ஓர் வேண்டுகோள் கேட்டது அரசு. ஐரிஸின் பெயரை கம்யூனிஸ்ட் பட்டியலில் சேர்த்துக் கொள்ள உத்தரவு கோரியது!

ஆம்! கம்யூனிஸம் என்றால் என்னவென்றே தெரியாத ஐரிஸ் கம்யூனிஸ்ட் வீராங்கனையாக மாண்டாள்!

1945ம் ஆண்டு ஜனவரித் திங்களில் அட்ரியானோ, சில்வியோ, ஐரிஸ்—மூவருக்கும் கல்லறையின் வாயிலிலே ஓர் நினைவுச் சின்னம் எழுப்பினர்!

மூன்று பேரின் உடல்களும் என்றோ மாண்டுவிட்டன!

பதினைந்து ஆண்டுகள் மறைந்து விட்டன.

ஆனால்...!

அவர்களின்பெயர்கள் இன்றும் வாழத்தான் வாழ்கின்றது. இனியும் வாழும்! ரோமக்னு நாட்டுமக்கள் தங்கள் குழந்தைகளுக்கு அவர்கள் கதையினைச் சொல்ல, குழந்தைகள் தங்கள் குழந்தைகளுக்குச் சொல்ல — அவர்கள் பெயர் வாழ்ந்துகொண்டே இருக்கும்.

வீரமும், விடுதலை ஆர்வமும் மனித இதயத்தில் இருக்கும்வரை அவர்கள் பெயரும் இடம் பெறத்

தான் செய்யும்—அவர்கள் வாழத் தான் வாழ்வார்கள்!

இதுவரை:—

சில்வியோ கார்பாரியின் தலைமையில் பிரிவினை இயக்கம் ஒன்று ஜெர்மானியர்களுக்கு எதிராக நடந்து வந்தது. அதில் பணி புரிந்து வந்த வெர்ஸாரிக் குடும்பத்தை சேர்ந்த ஐரிஸின் தந்தையை, குழந்தைகளையும் சிறைப் படுத்த, ஐரிஸ்மட்டும் தப்பி வந்து விடுகின்ருள். சில்வியோவின் கூட்டத்தில்சேர்ந்துவிடுகின்ருள், ஆண்களுக்கிணையாக போர்புரிய, வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள!

*

விடுதலைக் கூட்டத்தில் உள்ள அத்தனை ஆண்களுக்கிடையே, ஐரிஸ் வாழ்க்கை நடத்துகின்ருள். ஒற்றர்கள் மூலம், தன் பெற்ரோர்களுக்கேற்பட்ட நிலையினை எண்ணி வேதனைகொள்கின்ருள். அவளைப் பற்றிய கவலை சில்வியோவையும் நிலை கலங்கவைக்கிறது. அங்குள்ளோரில் ஐரிஸின் நலனுக்காக துடிக்கும் ஓர் உள்ளம் — சில்வியோவின் உள்ளம்.

*

ஒருநாள், மதுச்சாலை ஒன்றில் சில்வியோவிற்கு ஏற்பட்ட அபாயத்தை, ஐரிஸ் தடுத்தாள் — ஐரிஸின் உதவியால் மரணத்தின் பிடியால் தப்பினன் சில்வியோ. இச் செய்தி கூடாரமெங்கும் பரவி அனைவரும் அவளுக்கு நன்றிகூற, அவள் அக்கூட்டத்தில் பெருமை மிக்கவளாகி விட்டாள். அது மட்டுமல்ல...! தலைவனின் உள்ளமும், ஐரிஸின் உள்ளமும் ஒன்று கலந்து உறவாடியது.

*

காதலர் இருவரும் ஒன்று சேர்ந்து போராடிப் படையை விரட்டி விட்டு வெற்றிக் களிப் போடு வீடு திரும்பும்போது அதிர்ச்சி தரும் செய்தியொன்று காத்திருந்தது. புதிய போர்க் கருவிகளின் விசையைத் திருடிக் கொண்டு படையைவிட்டு ஓடிவிட்டான் இளைஞன் பிராங்கோ ரோஸி!

ஐரிஸ் மிகவும் சஞ்சல முற்ருள், என்ன நேருமோ, ஏது வந்து சேருமோ என்று! இன்ப நினைவுகள் கனவாகிவிடுமோ எனக் கலங்குகிருள்......

★

பெரிய மனிதர்!

வி. ஆர். துரை

நான் அவசர அவசரமாக நடந்து கொண்டிருந்தேன். குடும்பத்திற் கென்று வாங்கிய பொருள்களும், அப்போது என் கையில் இருந் தன. அவற்றில் என் மனைவிக்குப் பிடித்தமான சில பொருள்களும் இருந்தன என்பதை அவசியம் சொல்லியாகவேண்டும். சென்னையில் கிடைக்கும் இந்த அபூர்வமான பொருள்களெல்லாம், என்னுடைய குக்கிராமத்தில் கிடைக்குமா? அங்கு மூன்று நாள் முறுக்கும், நான்கு நாள் வடையும் அல்லவா கிடைக்கும்!

அந்தத் தார் போடப்பட்ட அகலமான பாதை முழுவதையும் அடைத்துக்கொண்டு, மக்கள் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்தார்கள். அதில் நாகரிகத்திற்கு முதலிடம் கொடுக்கும், நகர வாசிகளும் இருந்தார்கள். நாட்டின் முதுகெலும்பான நாட்டுப்புற வாசிகளும் இருந்தார்கள். கிராப்பும் இருந்தது! குடுமியும் இருந்தது! டை கட்டி ஆடம்பரமாக வாழ்பவர்களும் இருந்தார்கள். அவர்களின் பின்னல் கை கட்டிச் சிக்கனமாக வாழ்பவர்களும் இல்லாமல் இல்லை. நல்ல முறையில் தம்மை அழகுபடுத்திக் கொண்டிருந்த, நல்ல பெண்மணிகளும்போய்க்கொண்டிருந்தார்கள். நடுத்தெருவையே நாடகமேடையாக நினைத்துக்கொண்டு, மெல்லிய ஆடைகளை அணிந்து கொண்டு, நடை பழகும் நாரிமணிகளும் இல்லாமல் இல்லை. எல்லாவற்றையும் விடப், பட்டிக்காட்டிலிருந்து வந்த பெண்ணொருத்தி, அந்தப் பட்டணத்துக் கடைத் தெருவை, அப்படியும் இப்படியும் முறைத்துப் பார்த்து மயிலென நடந்து சென்றுகொண்டிருந்தது இரசிப்பதற்கு நல்லதொருகாட்சியாக இருந்தது.

இவற்றையெல்லாம் நானும் என்னுடன் பேசிக்கொண்டு வந்த மற்ெறருவரும், பார்த்த வண்ணமே வந்துகொண்டிருந்தோம். அவர் என் நண்பர் அல்ல; பல நாள் பழகியவரும் அல்ல. ஒரு புதியவர்; என்ருலும் மிகவும் நல்லவர்; பெரிய மனிதர். ஆளைப் பார்த்தே நான், ஒரே நொடியில் சரியாக எடை போட்டுவிட்டேன். ஒருவனுடைய முகத்தைப் பார்த்தே எல்லாவற்றையும் சொல்லிவிடலாம் அல்லவா? பழகியவரைப் போலவே அந்தப் புதியவர், என்னுடன் பல விஷயங்களைப் பற்றி அலசியவண்ணம் வந்துகொண்டிருந்தார். அரசியல் அவருடைய வாயில் மிகச் சரளமாக அடிபட்டது. நானும், கதர் சட்டை மாட்டிக்கொண்டிருந்த அந்தப் பெரிய மனிதருடன் உற்சாகமாய்ப் பேசிக்கொண்டே வந்தேன். அடுத்துவரும் தேர்தலில் தாம் ஒரு எம். எல். ஏ.யாக நிற்கப் போவதாகவும் அவர் சொல்லிக்கொண்டார்.

என்னைக் கடந்து வேகமாகச் சென்றவனிடமிருந்து, ஏதோ ஒன்று கீழே விழுந்துவிட்டது. அதையறிந்த ஏமாளி கவனிக்காமலேயே வேகமாகப் போய்க்கொண்டிருந்தான். என்ன அவசரமோ! சற்றென்று குனிந்து அதை யெடுக்க நான் முயற்சித்தேன். ஆனால், என்னுடன் வந்தவர் முந்திக்கொண்டார். பொட்டலத்தைத் தன் கையில் அவர் வைத்துக் கொண்டு பிரித்துக்கொண்டிருந்த போது, ஒட்டைச் சிவிங்கிபோல் நான் கழுத்தை நீட்டி எட்டிப் பார்த்தேன். பெண்களின் இலை யொத்த மெல்லிய செவிகளையும், மணிக் கழுத்தையும் அலங்கரிக்கும் தங்க நகை! நான் திகைப்படைந்து ஒரு கணம் நின்றேன். பிறகு என்னைச் சமாளித்துக்

கொண்டு மெதுவாக நடந்தேன். எனக்கும் அதில் பங்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை, அப்போது எனக்கிருந்தது.

"என்னங்க, நாம இரண்டு பேரும் வழியிலே பேசிக்கிட்டு வந்தோம். இது எனக்குக் கிடைத்தது. எனக்குத் கிடைத்ததுன்னு சொல்லிக்கிறது, எனக்கே அவ்வளவு நல்லாத் தெரியல்லே. இரண்டுபேருக்கும் இது கிடைத்ததாகவே பொருள். ஆளுக்குப் பாதி எடுத்துக் கொள்ளலாம். யாருக்குச் செய்தாளோ? எவ்வளவு கஷ்டப்பட்டு ஆசையோடு செய்தாளோ? மடியிலே வைத்த நகை அங்கேயே பத்திரமாக, இருக்கிறது என்றுதான் போய்க்கொண்டிருப்பான். இருக்கிறதா என்று கைவைத்துத் தடவிப்பார்க்கும் போதுதான், வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொள்வான். நகையைப் பாருங்கள் எவ்வளவு அழகாக இருக்கிறது. ஒரு புது மாதிரியாகச் செய்திருக்கிறான்." இரண்டு கையையும் நீட்டி நகையை வாங்கினேன்.

அந்தச் சமயத்தில் எதிரே நகையிழந்தவன் ஓடிவருவது தெரிந்தது. தர்ம சங்கடமான நிலை. நானே சட்டென்று அந்த நகையை மறைத்துவிட்டேன். வந்தவன் கேட்டான். இல்லையென்று நாங்கள் இருவருமே சேர்ந்து, கையை விரித்துவிட்டோம். பாவம், அவன் அழுதுகொண்டே ஓடினான். பரிதாபமாக இருந்தது.

பொற் கொல்லனிடம் செல்ல வேண்டுமென்று நினைத்தேன். அங்கிருந்த கடையை நோக்கி நடந்தேன். ஆட்கள் அவ்விடம் அதிகமிருப்பதாகச் சொல்லி, எதிரிலிருந்த கடையைக் காட்டினார் அவர். சென்றேன். தட்டான் பார்த்தான். எனக்கிருந்த ஐயம் நீங்கியது. நகையை எப்படியாவது தட்டிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம், எனக்குப்பிறந்து விட்டது. அங்கிருந்து இருவருமே புறப்பட்டுப் பேசாமல் நடந்து கொண்டிருந்தோம்.

"பாதி பாதி எடுத்துக்கொள்ளலாம்னு சொல்றது, அவ்வளவு நல்லதாத் தெரியிலிங்களே!" நான் ஆரம்பித்தேன். "அப்படியென்றால் பாதி பணம் எனக்கு கொடுத்து விடுங்கள்." அவர் நியாயமாகக் கேட்டார்.

கொஞ்சம் பணத்தைக்கொடுத்து, அவரை ஏமாற்றிவிட்டு, அன்றே இரயிலேறி நகையுடன் ஊர் வந்து சேர்ந்தேன்.

வந்ததும் வராததுமாய் அன்பு மனைவியை அழைத்தேன். அந்தக் குரலில் அதிகாரம் இருந்தது. இராகம் போட்டுக்கொண்டே அவளும் சீக்கிரமே வந்து சேர்ந்தாள். நானாகவே அவளின திருக்கழுத்தில் நகையைப் போட்டேன். இப்படிக் குழந்தைபோல் அவளிடம் எப்போதுமே நடந்துகொண்டதில்லை. பூரித்துப் போய்விட்டாள்.

ஒன்றிரண்டு நாட்கள் கழிந்தது. தன்னுடைய சிநேகிதியின் திருமணத்திற்கு என் மனைவி சென்றாள்; திரும்பிவந்தாள். எப்படியிருந்தது கல்யாணம் என்பதை விசாரிக்க, அவளருகில் சென்றேன். எப்போதும்போல் முகத்திலே சிரிப்பில்லை. சோகம் கப்பிக்கொண்டிருந்தது. நான் அவளை நெருங்கி அமர்ந்ததும், முகத்தைச் சடக்கென்று வேறு பக்கம் திருப்பிக்கொண்டாள். "கோபம்! என்ன கோபமோ? கொஞ்சம் திரும்பு கோகிலமே!" என்றேன். என் னுயிர் மனைவி நகை சம்பந்தமாக என் மீது எரிந்து விழுந்தாள். அது தங்கத்தால் செய்யப்பட்ட நகை அல்ல! பித்தளை!! தட்டானும், அந்தப் பெரிய மனிதன் வேடம் போட்ட அற்பனும், மற்றொருவனும் சேர்ந்து நடத்த நாடகத்திற்கு, நான் சரியாகப் பலியாகி விட்டேன். அப்போது பார்க்க வேண்டுமே என் முகத்தை! நானவளைச் சமாதானம் செய்யப்போய், எனக்கவள் ஆறுதல் கூறவேண்டிய அளவுக்கு, நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

நேற்றுப் பிறந்துவிட்டு, இன்று ஆர்ப்பரிக்கும் பச்சிளம் குழந்தையாம் இந்தி, இந்தப்பித்தளை நகையைப் போன்றதாகும். அதைத் தங்க நகை என்று பலர் பிரமாதப் படுத்துகிறார்கள். அவர்களெல்லாம் சாதாரணமானவர்களல்ல! பெரிய மனிதர்கள்!! அந்தக் கூட்டத்தில் தமிழர்களும் இருக்கிறார்கள். அந்தச் சுயநலமிகளுக்கு அப்படிப் பிரச்சாரம் செய்து கொண்டு திரிவதிலே, தட்டானைப் போன்று ஏதோ இலாபம் கண்ணிற்குத் தெரியவேண்டும். விலைமகளாம் இந்தியை வீட்டிலே நாம் யோசிக்காமல் கொண்டுவந்து உட்கார வைத்தால், தங்க நகையென்று வாங்கிவந்தது பித்தளை என்று தெரிந்ததும் தலைமேல் அடித்துக்கொண்டவனைப் போல, பின்னால் வருந்தவேண்டி வரும் என்ற உண்மையை எவரும் மறுக்கமுடியாது. பித்தளையைத் தங்கம் என்று நினைத்துத், தமிழர் பண்பாட்டுக்கே மாறான கொடுமை புரியும் சில தமிழர்கள் இன்னும் இருப்பதைப் பார்க்கும்போது தான், நம்முடைய—நம் கழகம் தாங்கியிருக்கும் கொள்கையினுடைய வளர்ச்சியில் வேகமும் விறுவிறுப்பும் இப்போதிருப்பதை விட அதிகமாக ஏற்பட வேண்டுமென்று விரும்புகிறோம்.

★

என்னவோ தெரியவில்லை, ஆண்டவர்கள் சம்பந்தமான ஆபத்தான சேதிகள் அடிக்கடி வருகின்றன! சீரங்கத்திலாவது சிலையோடு போயிற்று — ஆந்திரத்திலுள்ள கதிரியில் சாமி தரிசனம் செய்துவிட்டு வந்த 14-வயது சிறுவனின் தலையில் கோபுரம் இடிந்து விழுந்ததாம் ஏப்ரல் 3-ந்தேதி!! தன் தம்பியுடன், கோயிலுக்குப் போய்விட்டு வந்திருக்கிறான். 400-ஆண்டுகளுக்கு மேலான நரசிம்மசாமியின் கோபுரம் இடிந்து விழுந்து, அதே இடத்தில் பையன் மாண்டான்; அவன் தம்பி ஆசுபத்திரியில் கிடக்கிறான். இரண்டு குரங்குகள், கோபுரத்தின் உச்சியில் சண்டைபோட்டுக் கொண்டனவாம்! இப்படியும் அப்படியும் அவை தாவியது தாங்காது, ஏற்கனவே, கல்லுகிப்போன அக்கோபுரம் மடமடவெனச் சாய்ந்து விட்டதாம்!!

❀

தவறு மன்னனுடையதே!

குறிஞ்சி நிலப்பகுதி! மந்தமாருத மான மாலை வேளை! அந்த வேளையிலே ஓர் கட்டழகன்! கன்னியர்களின் கடைக்கண் பார்வைக்கும் தப்பமுடியாத அளவு அழகு வாய்ந்தவன்! வருகிறான்! அதே நேரத்திலே கட்டிளம் பெண் அழகு மணத்தைப் பரப்பியவண்ணம் மயில் நடை போட்டு அந்த வழியே வருகின்றாள்! அந்த நடமாடும் எழிலோவியத்தைக் காண்கின்றான்! சந்தித்த மாத்திரத்திலேயே தன் சிந்தையைச் சிதற விடுகின்றான்! அவளது எழிலுருவம் அத்தனையும் அவனது உள்ளத்திலே அப்படியே படிந்து விடுகின்றது! கனிமொழியாளைப் பார்க்கும்போதெல்லாம் பேசவேண்டும் என எண்ணுகின்றான்! மனம் துணியவில்லை! நாள் தவறாமல் நடையழகி வந்து போகின்றாள்! பார்க்கும் நேரமெல்லாம் உள்ளம் பறிகொடுக்கின்றான்! உள்ளம் அனைத்தும் அந்த ஆரணங்கின் மேல் பறிகொடுத்துவிட்டு பைத்தியம்போல் தன் நிலை மறந்து நிற்கின்றான்! அவளும் இவனது இத்தகையவேட்கையை அறிந்து ஒரு வார்த்தைக்கூடப் பேசவில்லை! நாள்தோறும் அவள் வருவதும், பேசாமல் போவதும் அவன் உள்ளத்தை வாள்கொண்டு அறுக்கிறது! அக் கண்ணழிகிக்குத்தான் ஏன் இந்த வேடிக்கை! அவன் மனம் உடைகின்றான்! பேசலாம் என்று நெருங்கினாலோ அவன் பேச்சுக்கு மறுப்புக்கூடக் கொடுக்க மோகன வாயைத் திறக்கமாட்டேன் என்று போகிறாள்! அத்தகைய போக்கைக் கண்டும் வருந்துகின்றான்! பொறுத்துப் பார்த்தான்! தன் உள்ள வேதனையை அடக்க முடியவில்லை. வாய் திறந்தே அவளைப்பற்றிக் கூறுகின்றான்?...!

"அன்று மலர்ந்த கொன்றை மலரை தன் தலை நடுவே வைத்து முடித்துக்கொண்டிருக்கிறாள்! மலர் மணமும், கூந்தல் அழகும் ஒன்று சேர்ந்து சடையாக உருப்பெற்று அவளது அழகிய தோள்களிலே கிடந்து அழகை இன்னும் அதிகப்படுத்துகின்றது! அவளது கண்களோ கண்டாரை மயக்கும் தன்மையுடையனவாக இருக்கின்றன! மாம்பழக் கன்னங்களோ கள் வெறியை உண்டு பண்ணும் வகையில் இருக்கின்றன! வானத்து வட்டநிலா போன்று அவள் முகம் ஒளிவீசியவண்ணமிருக்கிறது! இத்தகைய எழிலோடு நாள்தோறும் வருகின்றாளே! வந்து என் பேதை உள்ளத்தைக் கலக்குகின்றாளே! இவள் யார்?...!"

"வல்லவன் தன் கைப்படச் செதுக்கி வையகத்திலே விடப்பட்ட பொற் சித்திரமோ?... வனிதாமணிகளின் சிறந்தஉறுப்புக்களையெல்லாம் ஒன்று சேர்த்து உருவாக்கப்பட்ட உயிரோவியமோ?... தன் உருவத்திலே வெறுப்படைந்து, மயக்கும் உருவம் எடுத்து என்னைப்போன்ற ஆடவர் உயிரை வாங்க வந்த எழிலோவியமோ?...! ஒன்றும் என்னால் அறிந்துகொள்ள முடியவில்லையே!... இவள் பெற்றோர் ஏன் இவளை வெளியே விட்டனர்? வெளியே விட்டு என்னைப் போன்றவர்கள் படும் வேதனையைப் பார்க்கவோ?... அவள் பெற்றோர்கள் எவ்வளவு பெரிய கொடுமையை என்னைப் போன்றவர்களுக்குச்செய்துவிட்டார்கள்! முல்லைக் கொடி தவழ்வதுபோல அசைந்து அசைந்து பல கண்ணைக் கவரும் வண்ணங்களால் தீட்டிய ஆடையை அணிந்து வருகிறாளே! குமிழ்ச் சிரிப்போடும், குறும்புப் பார்வையோடும் வருகின்றாளே; நெடுநாள் பிள்ளைப் பேறே இல்லாமல் வாடியவர் பெற்றெடுத்த ஒரே பூங்கொடியோ?"

அவன் உள்ளம் வர்ணிக்கத் தொடங்கியும் ஆறுதல் அடைய முடியவில்லை! துணிந்து பேசிவிடுவது என்றே தீர்மானித்துவிட்டான். மாலை

அ. ஹபீப்முஹம்மது

நேரமும் வந்தது! மயக்கும் பார்வையுடையாளும் வருகிறாள்! கட்டழகன் பேச ஆரம்பித்துவிட்டான்!

"மானின் கண்போல் கண்டோரை மயக்கும் கண்ணழகு உடையவளே! உன் நடையைக்கண்டு மயில்கூட வெட்கம் அடைந்துவிடும்! அழகு மட்டும் என்ன? கிளி தோற்று விடுமே! புறாப்போல் நின் மடப்பமும் அமைந்த பேரெழில் கண்டவரை சிந்தையைக் கலக்கி அழியச்செய்யும் தன்மை வாய்ந்தது என்பதை நீ அறிவாயோ? அறியமாட்டாயோ."

"வளைந்த முன்கைகளை உடைய வனிதாமணியே! உன் மோகன வாயைத் திறந்தால் முல்லை மொட்டுக்கள் என அறிந்து, வண்டினங்கள் உன் வாயைச் சுற்றி வட்டமிட வந்துவிடும் அளவு வசீகரப் பல்லழகு கொண்டவளே! அதுமட்டுமா? நின் தோள்கள், நிறத்தாலும், திரட்சியாலும் மூங்கில் போல் அல்லவா இருக்கின்றன! மென்மையினால் அனிச்ச மலரைப்போல் இருக்கின்றனவே? காதற் கடலை நீந்துவதற்குத் தெப்பம் போல் அமைந்திருக்கின்றனவே! இத்தகைய எழிலுருவம் கட்டிளங் காளையர்க்கு மட்டில்லாத்துயரைக் கொடுக்கும் என்பதை நீ அறிவாயோ? அறியமாட்டாயோ?"

"அழகிய மயிர் வரிசையுடையது உன் முன்கைகள்! மடப்பஞ்சிறந்த நல்லாளே! உம் மார்பகங்கள்தாம் என்ன? முற்றின கோங்கின் இளமுகையோ? அடிபரந்து விளங்கும் குரும்பையோ? மழைத்துளி விழும் போது திடீர் திடீரெனக் கிளம்பும் குமிழ்களோ? தடாகத்துத் தாமரை மொட்டுகளோ? இவைபோன்று இருக்கின்றனவே? ஆனால் இவை எல்லாம் கண்டவர் உயிரை வாங்கும் என்பதை நீ, அறிவாயோ? அறியமாட்டாயோ? நான் அறியேன்?"

வர்ணித்துக்கொண்டே செல்கின்றான்! கன்னியின் உருவத்தைக்கண்ட நேரத்திலேயே கட்டழகன் கூடக் கற்பனைத்திறம் கொண்டவனாக மாறிவிடுகின்றான்? உள்ள வேதனையைக் காட்டியபோதிலும் அந்த உடலழகி வாய்திறந்து பேசவில்லை! துணிச்சல்காரிதான்! முடிவில் மனம் வெறுப்படைகின்றான்! வேதனையோடு கூறுகின்றான்?

"இவ்வளவு தூரம் நான் கூறியும் உன் இதயம் இளகவில்லையே! பிறர் படும் துயரத்தையும் நீ எண்ணிப் பார்க்கவில்லையே? மதுபோதையிலே மயக்கங்கொண்டு இருப்பவளைப் போல ஏதும் சொல்லாது என்னை விட்டுப் போகின்றாயே? அழகோவியமே! அழியாத சித்திரமே! நான் கூறுவதைச் சற்றுக் கேள்."

"அழகு நடையும், அலங்கார உடையும் அணிந்து அதற்கேற்ற அங்க அமைப்போடு மயில் நடை போட்டு வரும் நீயும் குற்றமுடையவள் அல்லள்!! அழகெல்லாம் ஒன்று திரட்டி வார்த்தாற்போல் உள்ள உன்னை, ...ப்போன்ற இளைஞர்கள்கண்டு ...ம்படி இப்படித்தெருவிலே

உலவவிட்ட உன்சுற்றத்தாரும் தவறுடையவர் அல்லர்!! பின் யார் குற்றமுடையவர் என்று கேட்கின்றாயா? நன்றாகக் கேள்! மென்கொடியே!...?

"அரசனது அரண்மனையிலே உள்ள மதங்கொண்ட யானை நீர்த்துறைக்குச் செல்லும்போது, அந்த யானை மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் எனக் கருதி முன்கூட்டியே மக்களைத் தயார்படுத்தும் பொருட்டு பறையறிவித்து அந்த யானையை அனுப்புவது வழக்கம்! அதுபோல உன்னைப் போன்ற கட்டழகியை, கனிமொழியாளை ஊரிலே உலாவ விட்டால் என்னைப்போன்ற இளைஞர்கள் மனம் படாதபாடுபடும் என்று தெரிந்தும் அழகி வருகிறாள் என்று பறையறையாமல் உன்னை ஊர் நடுவே விடச்செய்தது மன்னன் தவறேயன்றி வேறு எவருடைய தவறும் அல்ல? பாவை வருகிறாள் என்று பாராள்வோன் பறையறைந்திருந்தால் நான் பைத்தியமாகும் அளவிற்கு கடைக்கண் பார்வை யாளைக்கண்டு மயங்கியிருக்க மாட்டேனல்லவா?...எல்லாம் இந்த நாட்டு மன்னனின் தவறேயாகும்! மதங்கொண்ட யானைக்கு அறிவிப்புக் கொடுத்தது போல மான்விழியாள் வருவதற்குமுன் அறிவிப்புக் கொடுத்திருந்தால் எங்களைப் போன்றவர்கள் ஏங்கித் தவிக்க வேண்டியதில்லையல்லவா?......தவறு அனைத்தும் மன்னனுடையதே அன்றி வேறு எவருடையதும் அல்ல" என்று தவறை மன்னன் மேல் சுமத்திவிட்டு மனச்சோர்வோடு செல்லும் இளைஞனின் காட்சியை காதலோவியம் கலித்தொகையிலே, குறிஞ்சிக்கலியிலே, ஆசிரியர் கபிலர் பெருமான் உள்ளத்திலே வெளிவந்த காட்சியினைக் காணலாம்! சொல்நயத்தையும், இலக்கியச் சுவையையும் கண்டு ஆனந்திக்கலாம்! கபிலர் கூறுவதைக் கண்டே களிப்பெய்துவோம்!

"ஆய்தூவி அனம் என,
அணி மயில் பெடை எனத்
தூதுணம் புறவு எனத்
துதைந்த நின் எழில் நலம்—
மாதர் கொள் மான் நோக்கின்
மடநல்லாய்—நிற்கண்டார்ப்
பேதுறூஉம் என்பதை
அறிதியோ? அறியாயோ"

"நுணங்கு அமைத்திரள் என
நுண் இழை அணை என
முழங்கு நீர்ப்புணை என
அமைந்த நின் தடமென் தோள்-
வணங்கு இறை வால் எயிற்று
அம் நல்லாய்!—நிற்கண்டார்க்கு
அணங்கு ஆகும் என்பதை
அறிதியோ? அ[illegible]?"

"முதிர் கோங்கின் முகை என
முகம் செய்த குரும்பை எனப்
பெயல் துளி முகிழ் எனப்
பெருத்த நின் இளமுலை—
மயிர் வார்ந்த வரி முன்கை
மட நல்லாய்!—நிற்கண்டார்
உயிர் வாங்கும் என்பதை
உணர்தியோ? உணராயோ?"

என வாங்கு,

"பேதுற்றாய் போலப் பிறர்
எவ்வம் நீ அறியாய்
யாதொன்றும் வாய்வாளாது
இறந்து ஈவாய்! கேள், இனி
நீயும் தவறிலை, நின்னைப்புறங்கடைப்
போதரவிட்ட நுமரும் தவறிலர்;
நிறை அழி கொல் யானை
நீர்க்கு விட்டாங்குப்
'பறை அறைந்தல்லது
செல்லற்க" என்னா
இறையே தவறுடையான்"

❦

2-ம் பக்கத் தொடர்ச்சி

இதுபோன்ற செலவுகளை எத்தனையோ 'பெரோஸ் காந்திகள்' பல தடவைகள் கண்டித்தனர். அநாவசியச் செலவுகளைத் தவிர்க்காமல் ஆண்மூடித்தனமாக நடந்து கொள்வது நாடாள்பவர்களுக்கு நல்லதல்ல என்பதை, நாமும் பல தடவை கண்டித்தும், திருந்தவில்லை.

காங்கிரஸ் ஆளவந்தார்கள் மேற்கொள்ளும் எந்தத் திட்டத்திலும், எந்த நிறுவனத்திலும் ஊழல்களும் ஊதாரிச் செலவுகளும் நிகழாமல் இல்லை.

"இதன்றைட்டில் 'திராவிட நாடு' பிரிவினைக்கு ஆதரவு பெருகி வருவதால், அவர்கள் கேட்கும் 'திராவிட நாடு' எப்போதானாலும் பிரித்துக் கொடுத்துத்தான் ஆகவேண்டும். அதனால் 'திராவிட நாட்'டைப் பிரித்துக் கொடுப்பதற்குள் வடநாட்டிற்குத் தேவையான தொழிற்சாலைகளையெல்லாம் கட்டி முடித்து வறண்ட வடக்கை வளமாக்கிவிட வேண்டும்" என்ற எண்ணம் டில்லி ஏகாதிபத்தியவாதிகளுக்கு இருப்பதால், அவசர அவசரமாகப் பல பெரிய திட்டங்களைத் தீட்டிப் பல தொழிற்சாலைகளை நிறுவி வருகிறார்கள். 'தொழில்கள் அத்தனையும் பெற்றாக வேண்டும்' என்ற பேராசையின் விளைவாக அவசர அவசரமாகத் திட்டங்களை உருவாக்குவதால், பல நூறு கோடி ரூபாய்கள் வீண் விரயமாகிக்கொண்டிருக்கிறது.

"தொழிற்சாலை நிர்மாணம் பற்றிக் குறித்த காலத்தில் முடிவுகளை மேற்கொண்டிருந்தால், இவற்றிற்கு இப்போது உத்தேசிக்கப்படும் செலவில் 40 முதல் 50 சதவிகிதம் வரை மிச்சப்படுத்தியிருக்கலாம்; கணிசமான அளவு அதாவது, சுமார் ரூ 320 கோடி வரை அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தியிருக்கலாம்"—என்று வடநாட்டில் உருவாகிவரும் முப்பெரும் உருக்கு ஆலைகளில் பல நூறு கோடி ரூபாய் பாழாவதைப்பற்றி மக்கள் சபை மதிப்பீட்டுக்குழு சுட்டிக்காட்டிக் கண்டித்திருக்கிறது.

மேலும், பல நூறு கோடி ரூபாய்களை விழுங்கிக்கொண்டிருக்கும் பிலாய், ரூர்கேலா, துர்க்காபூர் ஆகிய மூன்று உருக்கு ஆலைகளிலும் பணம் விரயமானதைப்பற்றி முன்பு காங்கிரஸில் இருந்த ஆச்சாரிய கிருபளானியும் கீழ்க்கண்டவாறு கண்டித்திருக்கிறார்.

"நிர்மாணிக்கப்பட்டு வரும் மூன்று பெரும் உருக்குத் தொழிற்சாலைகளில் மட்டும் சுமார் ரூ. 100 கோடி வரை பணம் வீணாகப் பாழடிக்கப்பட்டிருக்கிறது."

டில்லி சர்க்கார் இதுபோன்று கோடிக் கணக்கான ரூபாய்களைப் பாழடிப்பதுபற்றிப் பெரோஸ்காந்தியும், கிருபளானியும் கண்டிக்கிறார்கள், மக்கள் சபை மதிப்பீட்டுக்குழுவும் கண்டிக்கிறது.

இதுபோன்ற கண்டனக் கணைகள் காங்கிரசாட்சியின் மீது, அது ஆட்சிக்குவந்ததிலிருந்து தாக்கியவண்ணமிருந்தாலும் தன்னைத் திருத்திக்கொள்ள முயற்சிக்கவில்லை ஆள்பவர்கள்.

சிக்கனச் சிந்துபாடும் சிலர்களுக்கு, தங்கள் ஆட்சியில் ஏற்படும் ஊழல்களையும் ஊதாரிச் செலவுகளையும் தவிர்த்து, இனிமேலும் பணத்தைப்பாழடிக்காது—வீண்விரயமில்லாது பக்குவமாய்ச் செலவு செய்யும் நிலை ஏற்படுமா என்பது போகப் போகத்தான் தெரியும்.

★

இப்படியும் நடந்திருக்கலாம்!

[இந்த உரையாடல் இன்றைய அரசியல் நிலையை விளக்குவதாகும். திரு. காமராசருக்கும் தஞ்சையில் உள்ள ஒருவருக்கும் தொலைபேசி மூலம் நடந்ததாக விளக்கும் ஓர் கற்பனை உரையாடலாகும்.]

டிரிங்......டிரிங்.........

காமராசர்:- யாரு பேசுறது...

சுத்தம்:- சுத்தம் பேசறேன்...... நீங்க...

காம:- சுத்தந்தானே...

சுத்:- ஆமாம் சுத்தமேதான்.

காம:- காமராஜ் பேசுறேன்...

சுத்:- என்னங்க கார்ப்பொரேஷன்லே மெஜாரிட்டியா?

காம:- அடடா...... அதெல்லாம் இல்லை... நேருஜி...

சுத்:- ஏன் நேருஜி வருகையை ஒத்திப்போட்டாரா? அடடா...

காம:- ஏன்ய்யா அவ்வளவு அவசரம்?

சுத்:- இல்லிங்க ஒருவேளை...

காம:- ஒருவேளையாவது இரண்டு வேளையாவது...

சுத்:- அப்போ நான் நேரா மெட்ராசுக்கு வரட்டுங்களா?

காம:- அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்... அந்த மாலை...

சுத்:- ஏன் மாலையை ரொம்ப பெரிசா...

காம:- இல்லையா... இல்லை...

சுத்:- நீளம் அஞ்சடிதாங்க...... ரொம்பபிரமாதம்... ஸ்பெஷலா ஆளுங்க நம்ம வீட்டிலேயே வந்து செய்யுறாங்க... கூலிமட்டும் நூறுரூபாய்ங்க... எல்லாம் நம்ம நேரடிப் பார்வையிலேயே நடக்குதுங்க... நேருவே அசந்துடப்போறாருங்க...செவ்வாய்க் கிழமைகாலை 7 மணிக்கெல்லாம் வந்துடுங்க...

காம:- மண்ணுங்கட்டி....

சுத்:- ஏங்க அவ்வளவு கோபம்...

காம:- கோபமுமில்லே ஒண்ணுமில்லே.

சுத்:- தொண்டை கரகர மாதிரிங்குதே... ஏதாச்சும் உடம்புக்கு...

காம:- உடம்பெல்லாம் நல்லாத்தான் இருக்குது...... உள்ளம் தான்...

சுத்:- ஏன்? என்ன பண்ணுது! ஊட்டிக்குப்போனா போவுது... நம்ப ஏர் கண்டிஷன் அம்பாசிடரை அனுப்பட்டுமா?

காம:- அங்கே போக இன்னும் ஒரு வாரம்தானே இருக்குது...

சுத்:- அதுக்குள்ளே ஒருதடவை போயிட்டு வந்தா போவுது...

காம:- அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்...

சுத்:- ஊம்....மாலையைப்பற்றி என்னமோ சொன்னீங்க...

காம:- ஆமாம்....ஆமாம்.....மாலை ரொம்ப பெரிசா வேண்டாம்.

சுத்:- ஏன் நேருஜி ஏதாச்சும்... ஆடம்பரம் அது இதுன்னு வேணாண்ணுட்டாருங்களா?

[இரா. மாணிக்கம்]

காம:- ஆமாம்...இப்பத்தான் வந்துச்சு...

சுத்:- ஏன் திடீர்னு...

காம:- இல்லை...இல்லை...முந்தியே அவர் சொன்னதுதான்...நாம்பதான் மறந்திட்டு...

சுத்:- அப்ப மூணு அடி நீளமுன்னு போதுங்களா...

காம:- போதும்...போதும்... அது கூட அவ்வளவு ஆடம்பரமா வேண்டாம்.

சுத்:- நீங்க ஒண்ணு......ரொம்ப நாளைக்கப்புறம் நம்ப நேருஜி... அதுவும் அந்த தி. மு. க. பசங்க கருப்புக்கொடி காட்டினதற்கப்புறம் சென்னைக்கு வர்ரரு... ஏதோ தடபுடலா செஞ்சா நல்லாருக்குமா....அவுனுங்க பார்த்து அப்படியே முக்காடு போட்டு மூலைக்குப் போகவேண்டாமா!

காம:- அப்படித்தான் இருக்கு...

சுத்:- என்னங்க அப்படி சொல்லிட்டீங்க...

காம:- அந்தப்பசங்கதான் தட்டி...

சுத்:- எந்த பசங்கங்க...

காம:- அதான் அந்த தி. மு. க. பசங்க...

சுத்:- எதை? திராவிடநாட்டையா

காம:- அட நீ ஒண்ணு...ஏனய்யா தூங்குறீரா?

சுத்:- ஆமாம்! நீங்க எதைப்பற்றிப் பேசுறீங்க...

காம:- அதான்........கார்ப்பொரேஷன் தேர்தல் இருக்கில்ல...

சுத்:- அதுலே அவுனுங்க தட்டுப்பட்டானுங்களா... ஆமாம் ஆமாம் — அப்படித்தான் வேணும். நாம்ப யாரு...நம்ப இட்டவந்து அந்த பசங்க போட்டி போடறதுன்னா...அகிலத்தையே ஆட்டிப்படைத்த ஆங்கிலேயனையே விரட்டியடிச்ச வீர பரம்பரையைச் சேர்ந்தவங்களாச்சே...சிறு பசங்கதானே ...அனுபவமில்லாதவனுங்க.... பசங்க ஆழம் தெரியாம காலை விட்டானுங்க...

காம:- நீ ஒண்ணுய்யா.......சொல்றதை நல்லா காதுலே வாங்கிட்டுப் பேசும்...

சுத்:- அப்போ......பசங்க நல்லா வாங்கிட்டானுங்க...ஏதாச்சும் ஒரு பத்து வித்தியாசம் இருக்குங்களா...

காம:- ஊம்...ஊம் எட்டு வித்தியாசம்.

சுத்:- பரவாயில்லே... பரவாயில்லை அப்ப கார்ப்பொரேஷன் இன்னும் மூணு வருசத்துக்கு நம்பளதுதான்...

காம:- அட சொல்றதைக்கவனமா கேட்டுகிட்டு பேசுங்க...... எட்டு இடத்திலே அவுனுங்க அதிக மால்லே ஜெயிச்சுட்டாங்க.

சுத்:- ஐயயோ...... இங்கேதான் (தஞ்சையில்) கோட்டை விட்டோம்னு நெனச்சா—நீங்களும் தான் இங்கே என்னை நிற்க வேண்டாண்டீங்க...... அந்த அதிர்ச்சியே இன்னும் தீரலை, அதுக்குள்ள இதுவேறையா.

காம:- என்ன பண்றது...எல்லாம் பட்டணத்துப் பசங்க... படிச்ச வனுங்க... அப்படியே அவன் களுக்குப் போட்டுட்டாங்க.

சுத்:- அதுசரி; நம்பளதுஎத்தனை.

காம:- முப்பத்தேழுதான்.

சுத்:- அவனுங்க...

காம:- நாப்பத்தைந்தாச்சே...

சுத்:- ஏன்... சுயேச்சைகள் இருப் பாங்களே...

காம:- இருக்காங்க... இருந்து என்ன பண்றது. அவுங்க 13 பேருதான். அதிலும் மூணு அவுனுங்க ஆளுங்க... ஒண் ணுமே புரியலை...

சுத்:- இதுக்கு ஏங்க இப்படி அலட்டிக்கிறீங்க...... கோவை, மதுரை எல்லாம் போகலியா... பார்த்துக்கிலாம்.

காம:- அட அதுவேற விஷயமய்யா ...இது சிக்கடியில்லே...எத்தனை பெரிய மனுஷாள் — அதுவும் வெளிநாட்டிலிருந்து வருவாங்க போவாங்க... வரவேற்பு மற்ற தெல்லாம் அந்த தி. மு. க பசங் களையுமில்லே கூட்டிக்கிட்டுப் போவணும்.

சுத்:- சரி எதுக்கும் நான் அங்கே வர்றேனே...

காம:- ஆமாம்... ஆமாம் வாங்க நேரா பேசிக்கலாம். நேருஜி வந்திட்டுத் திரும்பிற சமய மாச்சே! அவரை டில்லிக்கு அனுப்பிவிட்டு நாமும் இங்கி ருந்தே மலைக்குப் போவோம்.

சுத்:- அதுவும் 'ஐடியா' தாங்க...

காம:- அப்படியே வரும்போது... இரண்டு.

சுத்:- வரைந்தானுங்களே... அதுக் கென்ன...

காம:- போதும் போதும்...

சுத்:- ஆகா... அதுக்கென்ன...... அப்படியே... இதோ புறப்பட் டேன்.

*

தேசியம் பேசுவோர்க்கு...

—[அன்பு]—

எந்த ஒரு ஆளுகைக்கு உட்பட் டிருக்கும் நிலப்பரப்பும் 'தேசம்' என்று அழைக்கப்படுவதற்குக்கீழ் கண்ட உண்மைகள் பொருந்தி யனவாக இருக்கவேண்டும்.

1. தன்நாடு: வரையறுக்கப்பட்ட நிலப்பகுதி இருக்கவேண்டும். அப் பகுதியில் பிறந்த மக்கள் ஒரேவித வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வதோடு அப்பகுதியைத் தங்கள் நாடாக — பிறந்த பூமி யாக மதிக்கும் ஒருமித்த கருத்து வேண்டும்.

2. தன்மொழி: அப்பகுதியில் வாழும் மக்கள் ஒரே மொழியைத் தங்கள்சொந்தமொழியாகக்கொண் டிருத்தல் வேண்டும். ஒரே மொழி உறவின் மூலம்தான் தேசியம் என்ற உணர்வே தோன்றும். சொந்தமொழிதான் மற்றெல்லா வற்றினையும்விட ஒற்றுமையைத் தூண்டி வளர்க்கும் சக்தியை அதி கம் பெற்றுள்ளது என்பது ராம் சே மூர் என்ற அரசியல் அறிஞ ரின் கருத்து.

3. சரித்திரம்: தேசம் என்று அழைக்கப்படுவதற்கு ஒரு பகுதி ஒரே பொதுவான சரித்திரத்தைக் கொண்டிருக்கவேண்டும். அந்நாட் டின் எந்தப் பகுதியிலும் ஒரே சரித்திர உண்மைகள்தான் நிலவ வேண்டும். அதையன்றி, ஏதே னும் ஒரு பகுதி மட்டும் அந்நிய ஆளுகைக்குக்கீழ் உட்பட்டிருந்தா லும் சரி, அல்லது அப்பகுதி மட் டும் அந்நிய நாட்டின்மீது படை யெடுத்துச்சென்றதாகச்சரித்திரம் இருந்தாலும் சரி, அந்நாடு பொது வான சரித்திரத்தைக் கொண்ட தாகாது?

4. கலை, வழக்கு, நாகரிகம்: இவ் வுண்மைதான் எல்லாவற்றினையும் விடவெளிப்படையாகத்தெரிவது. தேசம் என்றால் அது ஒரேவித கலை, வழக்கு, நாகரிகம் முதலான வற்றைக்கொண்டிருக்கவேண்டும். இவ்வுண்மைகளை வைத்துச் சுலப மாக ஒரு நிலப்பரப்பு தேசமா அல்லது கூட்டுச் சர்க்காரா என் பதைச் சொல்லிவிடலாம். நாகரிக மும் கலாச்சாரமும் நிலப்பரப்பின் தட்ப வெப்ப அயல் நாடுகளின் சூழல்களுக்கேற்ப ஏதோ ஓர் சிறிது மாற்றம் இருக்கலாமே தவிர, அடிப்படையில் ஒரு சிறிது வேற்றுமைகூட இருத்தல் கூடாது.

5. அரசியல் நோக்கு: அந் நிலப் பரப்பு தன்னுடைய அரசியல் நட வடிக்கைகளில் ஆரம்பமுதல் ஒரே பொதுவான கொள்கைகளைக் கொண்டிருக்கவேண்டும். அந் நிலப்பரப்பு அந்நிய ஆளுகையின் கீழ் இருந்தாலும் சரி, அல்லது விடுதலை பெற்றதாக இருந்தாலும் சரி, எல்லா வகையிலும் பொது வான அரசியல்நோக்கைக் கடைப் -பிடிப்பதாயிருக்கவேண்டும்.

6. பொருளாதாரம்: அந்நிலப்பரப்பு ஒரேவித சமமான பொருளாதாரக் கொள்கை உடையதாய் அமைய வேண்டும். ஒரு தேசத்தின் ஒற்று மையை அதன் வருமானச் செல வினங்களிலிருந்து தெரிந்து கொண்டுவிடலாம். எல்லாம் ஒரே தேசம் என்றிருக்கும்போது

அதன் பொருளாதார விஷயங்களில் அநாவசியமான பேதங்கள் எழக் காரணமில்லையல்லவா?

7. தேசிய உணர்ச்சி: இதுதான் மேற்கூறிய அனைத்தினும் மேம்பட்டது. அவையனைத்துக்கும் காரணம் தேசிய உணர்ச்சிதான். அவையெல்லாமிருந்தும் தேசிய உணர்ச்சி இல்லாவிடில் ஒரு நாடு தேசமாகாது. இவ்வுணர்ச்சி ஒவ்வொருவர் உள்ளத்தின் அடித்தளத்தினின்றும் இயற்கையாகக் கிளர்ந்தெழுவது.

மேற்கூறிய ஏழு காரணங்களும் பொருந்தியிருந்தால்தான் ஒரு நிலப்பரப்பை 'தேசம்' என்று அழைக்கலாம் என்று அரசியல் சாத்திரம் கூறுகிறது. இவையெல்லாம் அமைந்து ஏதேனும் ஒன்று இல்லாமற்போய்விடினும் அல்லது எல்லாமே இல்லாமற் போய்விடினும் அந்நிலப்பரப்பு தேசம் என்று அழைப்பதற்குத் தகுதியற்றது. இதை நாம் பொதுப்படையாகத்தான் நோக்க வேண்டும். ஏனெனில் உலகில் ஆங்காங்கு சில விதிவிலக்குகள் அமைந்திருப்பது இயற்கையே.

இந்தியா ஒரு துணைக்கண்டம் என்று சரித்திரத்தைச் சான்று வைத்துக் கூறிவருகிறது திராவிட முன்னேற்றக் கழகம். ஆனால் தேசியத் தோழர்களோ இந்தியா ஒரு தேசம் என்று கூறிவருகிறார்கள். மேலே நாம் குறிப்பிட்ட ஏழு உண்மைகளையும் பொருத்திப் பார்த்த பின்னர் கூறுகிறார்களா? அல்லது வேண்டுமென்றுதான் கூறுகிறார்களா என்பது நமக்குத் தெரியவில்லை. சுடுகாட்டில் சென்று பல்வேறு எரிந்த உடல்களிலிருந்து பொறுக்கப்பட்ட கைகளையும், கால்களையும், மண்டை ஓட்டையும் மார்பெலும்பையும் ஒன்றாக இணைத்து இதுதான் இறந்துபோன ஏகாம்பரம் என்று கூறுவது பொருந்துமா? அதுபோலத்தான் திராவிடத்தையும் மராட்டியத்தையும், சீக்கியஸ்தானையும் வங்காளத்தையும் ஒன்றாக இணைத்து இந்தியா—இது ஒருதேசம் என்று கூறுகிறார்கள்.

இந்தியா, மொழியால், கலையால், கலாச்சாரத்தால் பொருளாதாரத்தால், உணர்வால் உருவாக்கப்பட்ட ஒரு தேசமா என்று திரும்பத் திரும்பக் கேட்கிறோம். ஆனால் அவர்களோ இதையெல்லாம் விட்டுவிட்டோ அல்லது வேண்டுமென்றோ இந்தியா ஒரு தேசம்தான் என்று கண்ணை மூடிக்கொண்டு கூறிவருகின்றனர்.

'தன்நாடு' என்ற புனிதமான சொல்லால் இந்தியாவை ஒன்றுபடுத்த முடியுமா? அப்படியென்றால் திராவிடமும், சீக்கியமும், மராட்டியமும் சுதந்தர உணர்ச்சி கொண்டு தங்கள் சொந்த நாட்டை விடுவிக்க முயலாதே! மொழி, அடிப்படையில் இந்தியாவைத் தேசம் என்று அழைக்க முடியுமா? 'ஹை' வேறு 'ம்' வேறு தானே. 'அம்மா' வேறு 'மாதாஜி' வேறுதானே! இன்னும் இது போலப் பலப்பல மொழி வேற்றுமைகள் உண்டு! சரித்திரமும் இந்தியாவைத் தேசம் என்று அழைக்க அனுமதிக்கவில்லை. 'இந்தியா' என்ற சொல்லே இன்று சரித்திரத்திற்குப் புதியதாக உள்ளது. கலையும் கலாச்சாரமும் மதமும் கூட இந்தியாவைத் தேசம் என்று அழைப்பதற்கு ஒத்துழைக்கவில்லை. 'பஞ்சகச்சம்' வேறுதான்! நாலுமுழ வேட்டி வேறுதான்! 'ஷர்வாணி' வேறுதான் துண்டு வேறுதான். இட்டிலி வேறுதான். சப்பாத்தி வேறுதான்! மதக்காரர்களுக்குள்ளேயே 'ஒற்றுமையை' வளர்க்க முடியவில்லையே! அங்கு நிகழும், கொடுமையும் அநாகரிகமும் நிறைந்த கும்பமேளாக்கள் இங்கு என்றுமே நிகழ்ந்ததில்லை.

சிறுவயதில் பழத்தை 'பளம்' என்று சொல்லி பழக்கப்பட்டவர்கள் கடைசிவரையில் தவறு என்று தெரிந்தும் 'பளம்' என்றே சொல்லி வருவதுபோல, தேசியத் தோழர்களும் முதலில் தெரிந்தோ தெரியாமலோ இந்தியாவைத் தேசம் என்றழைத்துவிட்டு, இது ஒரு தேசமல்ல துணைக்கண்டம் என்று கூறி நிரூபித்த பின்னரும் பழையபல்லவியையே புதுப்புதுச் சுருதிகளில் பாடி வருகின்றனர்.

மேலும், இந்தியாவை 'தேசம்' என்று அழைக்கப்படுவதற்காக—அழைப்பதற்காக சில பகீரதப் பிரயத்தனங்களை எல்லாம் சட்டத்தின் துணைகொண்டு செய்துவருகின்றனர். அதன் விளைவுதான் "அகில இந்தியா..." என்ற சொற்றொடரில் ஆரம்பிக்கும் பல்வேறு அரசியற் பிரிவுகளெல்லாம். தென் இந்திய இரயில்வே (South Indian Rail- way) தென் பிராந்திய இரயில்வே (Southern Railway) யாக மாறியதும், சென்னையில் ஓடும் பஸ்களின் பழைய பெயர்களான Govern- ment Transport Madras என்பது State Transport Madras என்பதாக மாறியதும் இவர்களின் செயற்கை முயற்சிதான். போலித் தேசிய உணர்ச்சியின்மூலம் உண்மைத் தேசிய உணர்ச்சியை அடக்கிவிடலாம் என்று பகற் கனவு கண்டு வருகிறார்கள்! வெறும் வார்த்தை மாற்றங்கள் ஒன்றினாலேயே இந்திய தேசிய உணர்ச்சியை உண்டாக்கிவிடலாம் என்று நம்பி ஏமாறப்போகும் இவர்களுக்கு நாம் ஒன்றே ஒன்றுதான் கூற ஆசைப்படுகிறோம்: என்ன இருந்தாலும் திராவிடம் திராவிடம்தான்!

பரிபூரண மனிதருக்கு இன்றியமையாத இரண்டு குணங்கள், அன்பும் மரியாதையுமே ஆகும்.